THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941, ஜுலை—விசு, ஆடி | இதழ் ௭

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

ஏத்திமத மெல்லாம் எதை யறிந்தேம் என்னும்? எதைச்
சாத்திரம்நன் காய்ந்து சலிக்கும்? எதை—நாத்திகமோர்
சற்றுமே ஓர்ந்திலதாச் சாதித்திடும்? அதையே
பற்றுவாய் நெஞ்சே! பரிந்து.

(அகலிகை வெண்பா.) வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

மதம் எல்லாம் எதை ஏத்தி அறிந்தேம் என்னும்? சாத்திரம் எதை நன்கு ஆய்ந்து சலிக்கும்? நாத்திகம் எதை ஓர் சற்றுமே ஓர்ந்து இலதாகச் சாதித்திடும்? நெஞ்சே! அதையே பரிந்து பற்றுவாய்.

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

I. இன்ப மின்பமென் றேங்கு மாந்தர்காள்
இன்ப மன்பின்றி எங்கணுண் டாகும்?
அன்போ டுயிரிடை யொழுகுவீ ராயின்
இன்பந் தான்வந் தியையு முமையே.

(செந்தமிழ்ச் செல்வி) மா. வெ. நெல்லையப்ப பிள்ளை.

II. அ. தன்னயம் காரணமாகாமல், ஒருவரில் ஒருவர் மிஞ்சியவராய் விளங்க முயல்வதுண்டு. அப்படிப்பட்ட ஆசை பாராட்டத்தக்கது. பலர்கூடி முயல்வதிலும் ஒருவரில் ஒருவர் மிஞ்சி விளங்கவேண்டுமெனும் ஆசை காணப்படலாம். யாருடைய முயற்சியினால்; அதிகமான பொது நன்மை விளைந்ததென்னும் படி உழைத்தல் தவறன்று. இத்தகைய உழைப்பினால் ஆக்கம் அதிகப்படுமேயல்லாது அழிவு சம்பவிக்காது......தானெனும் உணர்வை எவ்விடத்திலும் மறந்திருக்க முடியாது. நன்மை விளைதற்பொருட்டு அதனையும் உபயோகப் படுத்தவேண்டும்.

The Victorious Life. Dr. Stanley Jones.

ஆ. உடல் நலனும் வலிமையும் தூய வாழ்க்கையில் அமைவதல்லவா? நல்ல காற்றும் உணவும் உடற் பயிற்சியும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாகும் நம் மனம் வாக்கு காயம் பரிசுத்தமாயிருத்தலும். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பது வள்ளுவர் வாய்மொழி. புதியனவெல்லாம் நல்லனவும் அல்ல — பழையனவெல்லாம் விலக்கவேண்டியனவும் அல்ல — எவ்வெவை நம் சமூக முன்னேற்றத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் தகுதியுடையனவோ அவற்றைக் கையாளச் சிறிதும் பின்வாங்கக்கூடாது. (செங்குந்த வாலிபர் மாநாடு) ஈரோடு முருகேச முதலியார்.

இ. அன்பு, நீடிய சாந்தமுள்ளது; தயாளமுள்ளது. அது, பொறாமை கொள்ளாது; தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது; அயோக்கியமானதைச் செய்யாது; தனக்கானதை நாடாது; கோபங்கொள்ளாது; குற்றத்தைப் பாராட்டாது. அநியாயத்தில் சந்தோசப்படாமல், சத்தியத்தோடு சந்தோசப்படும். யாவற்றையும் பொறுக்கும்; யாவற்றையும் நம்பும்; யாவற்றிலும் நன்மையை எதிர்பார்க்கும்; யாவற்றையும் சகிக்கும்.

வித்தியாதனம்.

III. இய லழகை யிலக்கியம் ஆக்குவோம்;
இயற்கை யுள்ளத்தில் இன்னிசை காணுவோம்;
இய லுணர்வைச் சிலையில் இலக்குவோம்;
எழுதுவோம் படமாய் இயல் வாழ்வினை;
கயல்விழி, கனிவாய், மலர்க் கைகளால்
கருதும் பாவனை காட்டி நடஞ்செய்வோம்;
செயல்கள் ஆயிரம் செய்வோம், கலையினால்
செகத்தின் சிற்பிக ளாகத் திகழுவோம்.

(நாடகக்கலை) சுத்தானந்த பாரதி.

II

தபசில் வகுப்பினரும் பின்னடைந்த வகுப்பினரும் முன்னேறுவதெப்படி?

இனமுன்னேற்ற வேலைகளுக்கேற்ற தலைவர்கள் தொண்டர்கள் வேண்டும்.

நம் நாட்டுப் பல அரசியற் கட்சித் தாபனங்களின் சரித்திரம், "உண்மையும் திறமையும் உழைப்பும் தலைமைக்குப் போதா ; ஒழுக்கமும் வேண்டுமென்பதை வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. இன முன்னேற்ற வேலைகளுக்கு மட்டுமல்ல, சமுக ஊழிய வேலைகளெதற்குமே கௌபீனசுத்தம் அவசியம் வேண்டும். தலைவர்கள் தொண்டர்கள் தற்கால இன நிலைமையின் கேவலத்தை உணர்ந்தவர்களாகவும் அதற்காகக் கவல்கிறவர்களாகவு மிருக்கவேண்டும். நம் மன நிறைவிற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் நம் நலமே கருதிச் செய்வன அவற்றைத் தரினும் அவை நீடிப்பதுமில்லை ; மாற்றுணர்ச்சியும் அடுத்தே துயருறுத்தத் தொடங்கிவிடும். பிறர் திருப்திக்கும் மகிழ்ச்சிக்குமாக நாம் வருத்தமேபடினும், அதினின்றும் நாமடைகிற மன நிறைவும் மகிழ்ச்சியும் நீடித்தும் நிலைத்தும் நிற்கும். இனமுன்னேற்றத் தலைவர்களும் தொண்டர்களும் இந்த உண்மையை உணரவேண்டும்; இத்தகைய மகிழ்ச்சியையே துய்க்க அவர்கள் விரும்பவேண்டும்.

ஆண்களிடையே செய்யவேண்டிய வேலையினும் அதிகமே பெண்களிடையே செய்யவேண்டியதிருக்குமாதலால், தொண்டர்கள் தம்பதித் தொண்டர்களாக அமைதல் நலம். தலைவர்களேனும் சொந்தப் படிச்செலவிலேயே இருநூறு முந்நூறு மைல் தூரமும் பல தடவை போய்வரக்கூடியவர்களாகவும், தம் சொந்தக் காரியங்களைக் கவனிப்பதற்கு வேறு ஏற்பாடு செய்துகொண்டிருப்பவர்களாகவும், மொத்தத்தில் வருடத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்கும் குறையாமல் பிறவிடங்களில் தாமசிக்கக்கூடிய சௌகரியமுள்ளவர்களாகவு மிருக்கவேண்டும். அவர்கள் நாற்பது ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களா யிருப்பினும், தளரா உழைப்புடையவர்களாயிருப்பின் சரியே. துணைத்தலைவர்கள் அப்படி முப்பது முதல் ஐம்பது மைல் வரை போய்வரவும் தொடர்ந்து நாலைந்து நாட்களும் பிறவிடங்களில் தாமசிக்கக்கூடிய சௌகரியமுடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

இனமுன்னேற்ற வேலைகளை ஏற்று அவற்றைத் தாங்களாகவும் விருத்தியாகச் செய்துவர முதலாவதாகச் சனங்களைத் தயார் செய்யவேண்டும்.

பலவிதமான சங்கடங்களிலிருப்பவர்களுக்கு நாம் உதவி செய்யப்போனால், அதைப் பிரியமாக ஏற்றுக்கொள்ளத்தானே செய்வார்கள் ; அதற்காக, அவர்களைத் தயார் செய்யவும் வேண்டுமாவென்று நினைக்கலாம். நம் நாட்டார் அதுவும் ஏற்பதிகழ்ச்சியென வைராக்கியமாகக் கொண்டிருக்கும் நந்தமிழ் நாட்டார், பிறருதவியை அதுவும் பிற இனத்தாருதவியை எளிதில் ஏற்றுக்கொள்ளுவதில்லை. உடம்பு வளையாத சோம்பேறிகள் சிலர் பிச்சைக்கு வருவதன்றி, அரைவயிறும் கால் வயிறுமாகக் காலங்கழிக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் நிலைமையை உள்ளவாறு அடுத்த வீட்டாரேனும் அறிந்திருக்கக் கூடுமென்று சொல்லமுடியாது.

அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டுமென்ற (What then must we do?) தால் சுடாயின் அருமையான நூலில், அவருத

வியைச் சில ஏழைகள் மறுத்த சம்பவங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

நாம், சாதாரணமாக, அனேகர் புத்தியாய்ப் பிழைக்காமல், சம்பாத்தியத்தில் கவனமில்லாமல், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து கெட்டுப்போயிருக்கிறார்க ளென்று நினைக்கிறோம். நாலடியாரில் நாம் காண்கிறபடியே, வளம்படவேண்டாதார் எவருமில்லை; அனேகமாக, தாஞ்சாக நஞ்சுண்பாருமில்லை. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையைப் பிரம்மச்சாரியின் மனைவிபோலும் (Bachelor's wife) கன்னிகையின் குழந்தைகள் போலவும் (Maiden's children) ஆரம்பிக்கின்றனர்; சம்பாத்தியத்தில் வெகுகவனம் செலுத்தியும் பார்க்கின்றனர். செட்டாகச் செலவு செய்தும் பார்க்கின்றனர். வரவுக்கு மிஞ்சிய செலவுப் பழக்கத்தையும் விடமுடிகிறதில்லை; வரவை அதிகப்படுத்தவும் முடிகிறதில்லை; சமுகக் கட்டுப்பாடுகளைத் தவிர்க்கவும் முடிகிறதில்லை. அடுத்தவர்களைப்போலவேனும் அவர்களுக்கும் ஒருபடி மேலாகவேனும் சுபாசுப சடங்குகளில் செலவழிக்காதுபோனால், தன் பரம்பரைக்கே வெகுகேவலமென்னும் நினைப்பும் அவர்களை விட்டகல்வதில்லை. இந்த நிலைமையில் பழைய கடன் வளர்ந்து, புதிதாக அவசரச்செலவுகளுக்குக் கைமாற்ருக வாங்கிக்கொள்ளுவதும் முடியாத நிலைமைக்குச் சீக்கிரமே வந்துவிடுகின்றனர். தங்களுடைய நிலைமை வெளிக்குத் தெரிந்தால், பிறர் ஏகதேசம் கொடுத்து வாங்குவதற்கும் இடமில்லாது போய்விடுமென்று பயப்படுகின்றனர். இப்படியே பலருமிருக்கின்றனர். இந்த நிலைமையில், அவர்களுடைய உண்மை நிலைமையையும் தெரிந்துகொள்ளமுடியாது. அதனைத் தெரிய முடியாதபோது, அவர்களுடைய நிலைமையை எப்படித்தான் திருத்தமுடியும்? அத்தகைய நிலைமையில் நாம் எதுவும் சொன்னால், தாட்சண்ணியம் தட்டமாட்டாமல் கொஞ்சநேரம் கேட்டுக்கொண்டிருக்கக்கூடும்; உலகம், தெரியாமல் பைத்தியக்காரத்தனமாக நாம் பேசுகிறதாக அவர்கள் கொண்டிருக்கும் கருத்தையும் வெளிவிட்டுச் சொல்லாதிருக்கவும் கூடும்; என்ருலும், அவர்கள் அதுவரை முயற்சித்துப் பாராத முறைகள் கிடையாதென்று எண்ணிக்கொண்டிருக்கும் அவர்களுக்கு, அப்படி முறைகளும் உண்டென்று விளக்கிச் சொன்னால் அவற்றை அவர்கள் கைக்கொள்ளவும் கூடுமென்றும் அதனால் திட்டமாக நாம் சொல்லுகிறபடி அவர்கள் விருத்தியடையக் கூடுமென்றும் தோற்றினால், அதன்பிறகே நாம் சொல்லுவதற்கு அவர்கள் உண்மையில் செவிசாய்க்கக்கூடும். அவர்களுடைய நிலைமையையும் ஒருவாறு நம்மிடம் தனித்துச்சொல்லக்கூடும். இப்படியாக, நாம் ஒவ்வொருவரையும் ஊக்கப்படுத்திவரும் காலத்தில்தான், பலர் சேர்ந்து செய்யவேண்டிய காரியங்களைச் சொன்னாலும், அவர்கள் கவனிக்கக்கூடும்; திட்டமாகவும் செய்யக்கூடும். இப்படியாக, இனமுன்னேற்ற வேலைகளைச் செய்ய ஆரம்பிக்குமுன் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் சனங்களைத் தயாரித்தாகவேண்டும்.

ஒரு சிலர் படித்து உத்தியோகம் பெறுவது போதாது.

சிலர் அரசாங்க உதவி சமுக உதவியால் படித்து உத்தியோகங்களும் பெற்று வருகின்றனர். அஃது அவர்களுடைய பெண்சாதி பிள்ளைகள் பிழைக்கிறதற்கு வழியாவதன்றி இனமுன்னேற்றத்திற்கு அவ்வளவாக உதவுவதில்லை. அப்படிப் பதவிபெறும் தபசில்வகுப்பினரில் அனேகர் தங்களினம் வெளிக்குத் தெரிந்தால், பொதுசன மரியாதை தங்களுக்குக் குறைந்துபோகுமென்று, தங்களினத்தையும் வெளிக்குக் காட்டிக்கொள்வதில்லை; தங்களினத்தாரையும் சந்திப்பதுமில்லை. அப்படிப் பட்டவர்களால், இனம் எப்படி முன்னேறும்?

அமெரிக்க நீகிரோவத் தலைவராக இருந்த புக்கர் வாசிங்டன் படிக்கப் பட்டபாடு ஆண்டவனே சரியாக அறிவான்; அவருக்கு வெகுவாக உதவிய திரு. ஆம்ச்டிராங்கும் அடுத்த

படியாகவே அறிவார்; அவர் தாயாரும் தமையனும் ஒருவாறாக அறிவார்கள். அப்படிப் படித்த அவர் தனக்கென வாழ விரும்பினாரில்லை. தன் வாழ்க்கையையே இன முன்னேற்றத்திற்காக அர்ப்பணஞ் செய்தார். அவர் வாழ்க்கைத் துணைவிகளும் அவர் செய்துவந்த இனமுன்னேற்ற வேலைகளில் அவருக்குதவியாக இருந்துவந்தனர். (இரண்டாம் மலர் மூன்றாம் இதழ் முதல் பன்னிரண்டாம் இதழ் முடிய வெளிவந்திருக்கும் வாசிங்டன் காட்டிய வழியைப் படிக்க.) தபசில் வகுப்பினரிலும் அப்படிப் பிறருதவியால் படித்தவர்கள் படிக்கிறவர்கள் இனமுன்னேற்றத்துக்காகத் தங்கள் வாழ்க்கையை இதுவரை அர்ப்பணஞ் செய்ததில்லை; இனியேனும் செய்யத் தயாராக இருக்கின்றனரா? இருந்தால், Hampton Institute, Tuskeyee Institute போன்ற கல்விச் சாலைகளில் அவர்கள் படித்திராவிட்டாலும், அப்படிக் கல்விச் சாலைகளை அரசாங்க உதவிகொண்டு பிறருதவிகொண்டு ஆரம்பித்து, இனமுன்னேற்ற வேலைகளை மாணவ மாணவிகளுக்குக் கற்பித்து நாடெங்கும் பரப்பி நடத்திவரலாம்.

(தொடரும்)

---

4. வேளாண்மை:

நம் மாகாணத்தின் நெல்விளைவையும் வியாபாரத்தையும் பற்றிய அறிக்கை 1934.

III

நம் மாகாணத்தில், நெல் பச்சரிசியாகவும் புழுங்கலரிசியாகவும் உணவாகிறது. அப்படியுணவாவதும், இடத்துக்கிடம் மாறுகிறது. தமிழ் ஜில்லாக்களில், மேல் வகுப்பினரே பச்சரிசியை உண்கின்றனர். சர்க்காரிலும் (Circars) கொடுக்கப்பட்ட ஜில்லாக்களிலும் (Ceded Districts) எவருமே பச்சரிசியை உண்கின்றனர். மலையாளத்தில் புழுங்கலரிசி தவிர்த்துப் பச்சரிசி யுண்பவரேயில்லை.

நெல் விளைகிற இடத்திலிருந்து செலவாகிற இடத்துக்குப் போகிறதை ஒழுங்குபடுத்தவேண்டுமென்றால், முதலாவதாக ஒவ்வொரு ஜில்லாவிலும் நெல்லின் அதிக விளைவு அல்லது குறைவு இன்னதென்பதை நிர்ணயிக்க வேண்டும். இதனைச் சரியாகக் கவனிப்பதற்கு, ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள சனத்தொகை, ஒவ்வொருவருக்கும் தேவையான தானிய அளவு, அதில் அரிசி எவ்வளவு மற்றத்தானியங்களெவ்வளவென்ற விழுக்காடு, மற்றத் தானியங்களின் விளைவு, நெல்லின் விளைவு இவ்வளவென்பனவும் தெரியவேண்டும்.

உணவின் அளவு வயதிற்குத் தக்கபடி மாறக்கூடும். கைக்குழந்தைகள் தானியமே உட்கொள்வதில்லை. சிறு குழந்தைகளும் கிழவர்களும் வாலிபர்கள்போல் உண்பதுமில்லை. ஆகையால், மொத்தச் சனத்தொகையையும் இவ்வளவு வாலிபர்களெனவும் கணக்காக்கிக்கொண்டால், தானியங்களின் தேவையையும் ஒருவாறு சுமாராக நிதானித்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும், நெல்லும் தானியங்களும், பல வேறு அளவாக விளைகின்றன. நெல் குறைவாகவும் மற்றத் தானி

யங்களதிகமாகவும் விளைகிற சில்லாக்களே, நெல் அதிகமாக விளைகிற சில்லாக்களிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கின்றன; சாதாரணமாக, மற்றத் தானியங்கள் ஒரு சில்லாவை விட்டு மற்றொரு சில்லாவுக்குப் போவதில்லை; அதாவது, அந்தந்த சில்லாவில் விளைவன, அங்கங்கேயே செலவாகின்றன; மிச்சமிருந்தாலும் பின் செலவிற்கே வைத்துக்கொள்ளப்படுகின்றன; ஆகையால், அவை ஒரு வாலிபருக்கு இவ்வளவு வேண்டுமென்று நிதானித்துக் கொள்ள முடியுமென்றால், அந்தச் சில்லாவில் அரிசி உணவை உட்கொள்ளுகிறவர்களின் விழுக்காட்டையும் நிதானித்துக்கொள்ள முடியும்; மற்றத் தானியங்கள் மிஞ்சுகிற அல்லது குறைகிற அளவும் அப்பொழுதுதான் திட்டமாகத் தெரியும். அதில் தலைக்கு ஒரு நாளைக்கு ஒரு அவுணம் கூடுமென்றாலும், 4இலட்சம் தன் (ton) அதிகமாக வேண்டுமென முடியும்.

சிம்லாவில் சாகுபடிப் பரப்பைக் கவனிக்கக்கூடிய மாநாட்டில், பத்து வருடங்களுக்கு முன் நம் மாகாணத்தில் நாள் ஒன்றுக்கு ஒருவர் 1¼ இராத்தல் அரிசி உண்டுவந்ததாகவும் முன்னினும் அதிகப் பெயர் இப்பொழுது நெற்சோறு உண்டு வருவதாகவும் சொல்லப்பட்டது. கர்னல் மெக்காரிசன் (Colonel McCarisson) ஒரு எளிய இந்து குடும்பத்தில் நாள் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 21 அவுணம் பச்சரிசிசெலவாகிறதென்றும் பணக்காரக் குடும்பத்தில் எண்ணெய் பால் பயறு காய்கறி தவிர்த்தும் 23 அவுணம் செலவாகிறதென்றும் குறிப்பிட்டிருக்கிறார். பண்டிதர் சிலேட்டர் (Dr. Slater) தன்னுடைய தென்னிந்திய பொருளாதார ஆராய்ச்சியில் (South Indian Economic Studies) பச்சரிசியென்றால் 27 அவுணமும் கேழ்வரகென்றால் 25 அவுணமும் செலவாகிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதிக உணவுத் தானியங்கள் விளைகிற இடங்களில் உண்ணும் அளவு, விலைக்கு வாங்கி உண்ணும் அளவிலும் அதிகமாகவே இருக்கக் கூடும். அதனையும் கவனித்துக் கணக்கிட்டுப் பார்த்ததில், ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 19½ முதல் 25 அவுணம்வரை அரிசி செலவாகிற தென்று கணிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் அரிசி தவிர மற்றத் தானியங்கள் செலவாவதில்லை; அங்கே ஆளொன்றுக்கு அரிசி 22 அவுணமே செலவாகிறது; மற்றத் தானியங்கள் நெல்லூர் சில்லாவில் 32 அவுணமும் கொடுபட்ட சில்லாக்களில் 36 அவுணமும் மற்ற சில்லாக்களிலெல்லாம் 26 அவுணமுமே செலவாகின்றன. அரிசி தஞ்சாவூர் கோயம்புத்தூர் சில்லாக்களில் 24½ அவுண விழுக்காடும் மற்றத் தமிழ்ச் சில்லாக்களிலெல்லாம் 19½ அவுண விழுக்காடும் செலவாகிறது.

அந்தந்தச் சில்லாக்களில் செலவாவதையும் விளைவாவதையும் கணக்கிட்டுப் பார்த்ததில், கோதாவரி கிருட்டிணா நெல்லூர் குண்டூர் தஞ்சாவூர் சில்லாக்களில் சாதாரணமாகப் பிற இடங்களுக்கு அனுப்பக்கூடியதாக மிஞ்சுமென்றும் கஞ்சம் செங்கற்பட்டு (செங்கழுநீர்ப்பட்டு) தென்ஆர்க்காடு வட ஆர்க்காடு சில்லாக்களில் நன்றாக விளையுங்காலம் கொஞ்சம் மிஞ்சுமென்றும் சென்னை மலையாளம் கோயம்புத்தூர் சேலம் விசாகபட்டினம் சில்லாக்களுக்குச் சாதாரணமாகப் பிறஇடங்களிலிருந்து அதிகமாகவே நெல் வந்து சேரவேண்டுமென்றும் மற்றச் சில்லாக்களுக்கும் பிற இடங்களிலிருந்து வர வேண்டியது அவசியமென்றாலும், மேற்கண்ட சில்லாக்களுக்கு வேண்டியதுபோல அவ்வளவு அதிகம் வேண்டியிராதென்றும் கணிக்கப்பட்டிருக்கிறது. நம் மாகாணத்தின் அரிசி தேவை 51½ இலட்சம் தன் (ton) ஆக இருக்க விளைவு 50½ இலட்சம் தன்னுக்கும் குறைவாகவே இருந்துவருகிறது; ஆகையால் இலட்சத்துப் பதினாயிரம் தன் வரை நம் மாகாணத்திற்குப் பிறவிடங்களிலிருந்து வந்தாகவேண்டும்.

(தொடரும்)

5. கூட்டுறவு:

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை

X

கூட்டுறவு இயக்கப் போக்கையேனும் நடைமுறையையேனும் கழகம் சரியாக உணர்ந்திருக்கிறதா?

கூட்டுறவியக்கம், விபசாயிகள் கிராமவாசிகள் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதித் தோன்றிய இயக்கம் அல்லவா? அப்படித் தோன்றிய இயக்கம், பட்டினங்களிலேயே வலுத்தும் அங்கும் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உதவுவது போலப் பிறருக்கு உதவாதிருக்குமாயின், அக் குறைவை நீக்குவதற்கான யோசனைகளும் கழகம் சொல்லவேண்டாமா? சென்னையில் ரூபா 8000 வரைக்கும் பிற இடங்களில் ரூபா 6000 வரைக்கும் வீடுகள் கட்டக் கூட்டுறவியக்கம் அரசாங்கப் பணத்தை உதவலாமென்றால், அப்படியே அதிகாரிகளுக்கும் படித்தவர்களுக்கும் வேறுவகையாக வேண்டும் பணம் தேடிக்கொள்ளக் கூடியவர்களுக்குமே கூட்டுறவு கட்டடச் சங்கங்கள் வெகுவாக உதவிவந்திருக்கிறதென்றால், அவ்வளவேனும் சிறு தொகைகளாக ஏழைகளுக்கு உதவிவர வேண்டாமா? இதனைப்பற்றி இந்தக்கழகம் கவனிக்கவேயில்லை. இதுவரை கூட்டுறவியக்கத்தில் ஏழைகளுக்கே உதவக்கூடிய சொற்பக் கடன்களின் அளவு மற்றக்கடன்களில் ஆயிரத்திலொரு பங்கேனும் இருந்துவரவில்லையென்றால், 90 சதமானத்திற்குமேல் ஏழைகளாக நிறைந்திருக்கும் நம் மாகாணத்தில் ஏழைகளுக்குப் பணம் இன்றியமையாத தேவையாயிருப்பதுபோலப் பணக்காரர்களுக்குத்தேவையும் அதிகமாக இல்லாதிருக்கவும், இருபது இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த கடன்கள் வெகு குறைவாக இருக்குமென்றால், அதனைக் கவனித்துத் திருத்துவதற்கான யோசனைகள் இந்தக்கழகம் சொல்லியிருக்க வேண்டாமா? படித்தும் வேலையில்லாதிருப்பவர்களுக்கு விபசாயக் குடியேற்றச் சங்கங்கள் உதவக்கூடுமென்று ஆதரித்துப் பேசும் கழகம், படியாதும் வேலை யில்லாதும் திண்டாடிக் கொண்டிருப்பவர்களுக்கு எத்துணை தீவிரமான யோசனைகள் சொல்லியிருக்கவேண்டும்? விபசாயக்குடியேற்றச்சங்கங்களைத்தபசில்வகுப்பினர்களுக்காக ஆதரித்துப் பேசியிருப்பதைத் தவிர்த்து மற்ற ஏழைகளுக்காக ஏதேனும் உபகாரமான யோசனைகள் சொல்லப்படவில்லை. தபசில் வகுப்பினர்களில் பதினாயிரத்தில் ஒரு பங்கினர்க்கேனும் கழகம் சிபார்சு செய்கிற விபசாயக் குடியேற்றச் சங்கங்கள் உதவிக்கொள்ள முடியுமா? அவை அப்படி உதவிக்கொள்ள முடியுமென்றாலும், மற்றவர்கள் பாடுதான் என்னுவது? நெசவாளிகளுக்குள் யோக்கியதை கிடையாது; அவர்களுக்கு உதவப் போவதெல்லாம் வீண் சிரமமாகவே முடியும் என்ற கூட்டுறவுப் பதிவாளர் கூற்றை ஆதரித்துப்பேசும் அறிக்கை பொது ஊழியர்கள் (public servants) கூட்டுறவுச் சங்கங்களில் நடந்துவரும் அழிம்புகளை ஒழிப்பதற்கேனும் தீவிரமான யோசனைகள் சொல்லுகிறதா? கிராமங்களில் விபசாயிகளிடையே செட்டைப் பரப்புவதற்காகப் பல யோசனைகள் சொல்லும் கழகம், கிராமங்களில் விபசாயிகளிடையே நெடுகலும் வழங்கிவருகிற தவசச்சீட்டு, தட்டுச்சீட்டு, ஏலச்சீட்டு இவற்றைக் குறித்து ஒன்றும் சொல்லாத காரணமும் தெரியவில்லை.

நம் நாட்டு நெசவாளிகளிடம் மட்டுமல்ல; மற்றவர்களிடமுமே யோக்கியதை குறைவாக இருக்க எவரிடத்தும் உண்மை குறைந்தும் சமர்த்து மலிந்தும் வர, அவற்றைக் காலாந்தரத்திலேனும் திருத்தக்கூடிய நடை முறை

யைக் காட்டி அதனைப் பின்பற்றிவரச் செய்யாதவரை, மிச்சம் தரும் உழைப்பைக் காட்டி மிச்சத்தைச் சேர்த்துவரவும் தூண்டித் தன்னுதவியையும் தன்னம்பிக்கையையும் உபகாரச் சிந்தையையும் வளர்க்காதவரை, இப்பொழுது ஆடிக்கொண்டிருக்கும் இயக்கம் வேரூன்றுவதுதானெப்படி? விருத்தியாவதுதானெப்படி?

(தொடரும்)

தபசில் வகுப்பினர்கள்.

தபசில் வகுப்பினர்களிடையே வறுமையே வெகுவாக இருந்துவருகிறதென்றும், எப்பொழுதும் அவர்கள் நிலமுதலாளிகளுக்குக் கடன்பட்டே யிருக்கிறார்களென்றும் அவர்களுக்கு எழுத்து வாசனையே கிடையாதென்றும், விபசாய காலங்களில் வேலை கிடைப்பதைத்தவிர்த்து மற்றக் காலங்களிலெல்லாம் வேலையே கிடைப்பதில்லை யென்றும் எந்தக் காலத்திலும் குடியிலேயே மூழ்கியிருக்கிறார்களென்றும் – இப்படியாக, 'அவர்கள் வரவும் சொற்பம்; அதுவும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை; திட்டமாகவும் இருப்பதில்லை; வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவர்களுக்குத் திறமும் இருப்பதில்லை; அவர்களில் நல்ல நிலைமையிலிருப்பவர்களும் மற்றவர்களைக் கவனிப்பதில்லை' யென்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலைமையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்கெனத் தனியாகவே இருக்கவேண்டுமென்றும், அவற்றிற்குக் கூட்டுறவுப் பாங்குகள் கடன் கொடுத்துதவமாட்டாதாதலால் அரசாங்கமே கடன்கொடுத்து உதவிவரவேண்டுமென்றும், பத்துவருடத் திட்டமொன்று போட்டு அரசாங்கம் அவர்களிடையே வேலை செய்துவரவேண்டுமென்றும் வாதிக்கப்படுகிறது. திட்டத்தின் விபரமும் கொடுக்கப்படவில்லை; அந்தத் திட்டத்தினால் அவர்கள் அடையக்கூடிய சாதகமின்னதெனவும் தெரியவில்லை. அரசாங்கம் இதுவரை அவர்களிடையே சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வேலை செய்தும், சிலசில இடங்களில் குடியிருப்பு வீடுகளும் குடிதண்ணீர்க் கிணறுகளும் சிலருக்கு நிலங்களும் சிலருக்கு அரசாங்க உத்தியோகங்களும் கிடைத்திருப்பதைத் தவிர்த்து அவர்களுடைய சமுகம் பொதுவாகக் கொஞ்சமும் முன்னேறியதாக இல்லை. தபசில் வகுப்பினர்களுடன் அரசாங்கமும் பிறரும் வெகு பிரயாசையெடுத்தும் சொற்பப் பலனே காணக்கூடியதாக அவர்களுடைய நிலைமையிருக்கவும் அரசாங்கம் உதவாது கழித்துவிடக்கூடிய சண்டைக்காலத்தில் அரசாங்கம் ஒன்றே அவர்களுக்குதவி அவர்கள் நிலைமையைத் திருத்த வேண்டுமென்று கழகம் சிபார்சு செய்திருப்பது விபரீதமாகவே தோன்றுகிறது.

---

6. கல்வி :

ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் III)

ஆரம்பக் கணிதம்

அ. நோக்கங்களும் முறைகளும்.

ஆரம்பப் பள்ளியின் முயற்சி எவருக்கும் தேவையானதைப் போதிப்பதிலேயே நிற்கவேண்டும். அப்படிச் செய்வதாக இருந்தால், சொல்லிவைக்கவேண்டிய கணக்கும் மிகவும் சுருக்கமாகவே யிருக்கும். ஆரம்பப் பள்ளிகளில் கற்பிக்கும் கணக்கு ஆரம்பக் கணக்காகவே இருக்கவேண்டும். ஐந்தாவது வகுப்புக்கும் மேல் படிக்கிற பிள்ளைகள், பின் அதிகக் கணக்கும் தெரிந்துகொள்ளலாம். ஐந்தாவது வகுப்

புக்கு மேல் போகாதவர்களுக்கு, பின் வாழ்க்கையிலும் மிகவும் நுணுக்கமான கணக்குகள் செய்யவேண்டியதான அவசரம் ஏற்படாது. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் வெகு சுழுவாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாகவே யிருக்கும்; ஆகவே, ஆரம்பப்பள்ளிகளில் செய்யப்படும் கணக்குகளெல்லாம் குழந்தைகளும் வாலிபர்களும் அவசியம் தெரியவேண்டிய கணக்குகளாகவே யிருக்கவேண்டும். மிகவும் பிரயோசனமான கணக்கையும் சுருக்கமாகவும் ஆனால் வெகு தெளிவாகவும் சொல்லிவைக்க வேண்டும். பின் வாழ்க்கைத் தேவைக்கோ மேல் வகுப்புப் பாடத்துக்கோ இதைக்காட்டிலும் அதிக நல்லவிதமாகவும் ஒருவர் தயாராக முடியாது.

சாதாரணமாக, குழந்தைகள் ஏழுவயதிற்கு முன்னதாக ஒரு குறைந்த அளவு மனோவிருத்திகூட அடைவதில்லை. அப்படி அடைந்தபின் கணிதம் கற்பிப்பதுதான் நல்ல விருத்திக்கு இடந்தரும். இந்தத் திறமை குறைந்திருக்கும்பொழுது, குழந்தைகளுக்கு நமது விளக்கமும் பிடிபடாது; அவர்களும் வெறும் ஞாபகசக்தியை வைத்தே செய்ய வேண்டியதும் வரும். இது கொஞ்ச காலத்திற்குப் பாதகமாகத் தோன்றுமல், எல்லாம் சரியாக இருக்கிறதாகவுங் கழியும். ஆனால், இது பின் கற்கவேண்டியதற்குப் போதிய அடிப்படையாகாது. கணக்குச் செய்வதற்கு வேண்டிய மனோவிருத்தி அமைந்திருப்பதோடு எண் பற்றிய நல்ல அனுபவமும் அவர்களுக்கிருக்க வேண்டும். மூன்றென்றால், ஐந்தென்றால், ஒன்பதென்றால் அதுபோலவே எந்த எண்ணும் நூறுவரை, இவ்வளவெனத் தெளிவாக அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். சிறு கட்டைகள் கோலிகள் முதலியனகொண்டு விளையாடுவதால், சிறு எண்களின் அனுபவம் அவர்களுக்குச் சரிவர அமையக்கூடும்.

ஒரு பையன் கணக்கு எதும் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னதாக, அவன் ஓரளவு மனோவிருத்தியடைந்திருப்பது மட்டும் போதாது; எண்களின் பெயரும் அவற்றின் வரிசையும் அதாவது சரியாக எண்ணவுந் தெரிந்திருக்கவேண்டும். அப்படி அடிக்கடி எண்ணுவதால், எண்களுக்குள்ள ஒரு சம்பந்தமும் தெரியவரும். ஒன்று முதல் நாலுவரை சரியாகச் சொல்லுகிற குழந்தையும் நாலு பொருள்களை எண்ணத்தெரியாதிருக்கலாம். ஆகையால், கணக்குகள் செய்ய ஆரம்பிக்குமுன் பல வேறு பொருள்களை அடிக்கடி எண்ணியும் பழகியிருக்கவேண்டும். ஒவ்வொரு எண்ணும் இவ்வளவுதானென்று தனிப்படவும் பிற எண்கள் சம்பந்தமாகவும் தெரிபடாதிருக்கும்பொழுது, கணக்குகள் போடுவது பிரயோசனமில்லை. போதிய அடிப்படையில்லாதபொழுது கணக்குச் சொல்லிவைப்பதைக் கொஞ்சம் தள்ளிவைப்பதால் கெட்டுப்போவதொன்றுமில்லை. இரண்டாவது அரை வருடத்திலேயே கணக்கை ஆரம்பித்துக் கொள்ளலாம். இரண்டாவது அரை வருடத்திலோ இரண்டாவது வருடம் முற்பகுதியிலோ அப்படிச் செய்துகொள்ளவும் செய்யலாம். அப்படிக்கில்லாது அவசரப்படுவதால், குழந்தைகள் நமக்கும் கணக்குக்கும் தூரமென்று நினைக்கவும், கணக்கென்றாலே அதை வெறுக்கவும் கூடும்.

குழந்தைகள் ஐந்தாவது வகுப்பு முடிவில் கீழ்க்கண்டபடி திறமை யடைந்திருக்கவேண்டும்.

1. கோடிவரை வரிசையாக எண்ண.

2. எட்டு, மூன்றுதான எண்களைக் கூட்ட.

3. நாலுதான எண்ணிலிருந்து மூன்றுதான எண்ணைக் கழிக்க.

4. நான்குதான எண்ணை மூன்றுதான எண்ணால் பெருக்க.

5. ஐந்துதான எண்ணை மூன்றுதான எண்ணால் வகுக்க.

6. அரை, கால், அரைக்கால், காலே யரைக்கால், முக்கால், அரையேயரைக்கால், மூன்றிலொன்று, மூன்றிலிரண்டு, ஐந்தி லிரண்டு, ஐந்தில் மூன்று, ஐந்திலொன்று இவை வரும் எண்களைக் கூட்டக் கழிக்கப் பெருக்க வகுக்க.

7. ஐந்து, பத்து, இருபது, இருபத் தைந்து, முப்பதின் மூன்றும் மூன்றிலொன் றும், நாற்பது ஐம்பது, அறுபத்தாறும் மூன்றி லிரண்டும், எழுபத்தைந்து, எண்பது, தொண் ணூறு சதமானங்களும், பன்னிரண்டரைச் சதமானமும் இவ்வளவென்று கணக்கிட.

8. நூறுவரை தமிழெண்களும் உரோம னெண்களும் (உரோமன் எண்கள் வாழ்க்கை யில் பயன்படக் கூடியதில்லை. ப-ர்.)

9. வீட்டு வரவு செலவுத் திட்டம் உள் பட வீட்டுக் கணக்கு.

10. கடைகளில் சில்லறைத் தேவைகளை வாங்கும் கணக்கு.

11. அங்குலம் அடி கெசம் பர்லாங் மைல் சதுர அங்குலம் சதுர அடி சதுர கெசம் ஏக்கர் செண்டு முதலிய அளவுகளும், நாட்டுப் படியளவுகளும், செக்கண்டு மணி நாள் வாரம் வருடம் நூற்றாண்டு முதலிய கால அளவு களும், மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற் றிருக்கும் நிறைகளும் தலத்தில் வழங்கிவரும் நிறைகளும்.

12. சாதாரண வட்டி.

13. சாதாரணக் கோடுகள் வெட்டுகளை யொட்டிய கொட்டறைக் (graph) கணக்கு.

பாடத் திட்டமும் மேற்படித் தேவைகளை யனுசரித்தே அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆ. அனுபவப் பயிற்சி (Problems)

ஒவ்வொரு வகுப்பிலும் அடிப்படையான வேலையில் அனுபவப் பயிற்சியும் கலந்திருக்க வேண்டும். இதுவரை சேர்க்கைக் கணக்குக ளெல்லாம் ஒரு வரிசையாகவே கற்பிக்கப்பட்டு வந்தன. நம் அனுபவத்தில் சேர்க்கையெல் லாம் அப்படி வரிசையாகவே வருகிறதில்லை; ஆதலால், அப்படிப் படிப்பதும் பிரயோசன மில்லை. ஐந்தோடு மூன்று கூடினால் எட்டாகு மென்று படித்தவுடனேயே மூன்றோடு ஐந்து கூடினாலும் எட்டுத்தானாகுமென்பதை அதிகச் சிரமமில்லாமலே கற்பித்துவிடலாம். மூவைந்து பதினைந்து என்பதைப் படித்த சில நாட்கள் மாதங்களான பிறகே ஐம்மூன்று பதினைந்தென் பதைப் படித்து வருகின்றனர். அப்பொழு தும் இரண்டுக்குமுள்ள ஒற்றுமையை ஏக தேசமே குழந்தைகள் உணர்வதாக முடியும்.

இரண்டாவது வகுப்பிலும் மூன்றாவது வகுப்பிலும் கணக்குக்குப் பின் அனுபவப் பயிற்சி ஓரேயடியில் (Step) செய்து முடிக்கக் கூடியதா யிருக்கவேண்டும். நாலாவது வகுப் பிலும் ஐந்தாவது வகுப்பு முன்பாகத்திலும் இரண்டு அடிகளில் செய்து முடிக்கக்கூடிய தாயும், ஐந்தாவது வகுப்புப் பின் அரை வரு டத்தில் மூன்றரையில் முடிக்கக்கூடிய கணக்கு களும் போடலாம். ஆனால், அப்படிப் போடும் ஒவ்வொரு கணக்கும் சமூகத்திற்குப் பிரயோ சனப்படக்கூடிய கணக்காக இருக்கவேண்டும். குழந்தைகள் வாலிபர்கள் இவர்களுடைய வாழ்க்கைக்கு ஒட்டாத கணக்குகளால் எவ் வகைப் பயனுமிராது. கணக்குகள் எப்பொழு தும் குழந்தைகளுக்கு அர்த்தமாகக்கூடிய விதமாகவே போடப்படவேண்டும்.

இ. எண் சேர்க்கைப் பயிற்சி

Drill in the number of combinations.

0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 எண்களைப் பலவகையாகவும் சேர்த்து நூறுவரையாக்கப் படவேண்டும். சைபரைப் பிற எண்களோடு கூட்டுவதால், பிற எண்களிலிருந்து கழிப்ப தால் பிற எண்களுக்கு முன்பின் சேர்ப்பதால் என்னாகுமென்பதும் தெளிவாகக் கற்பிக்கப் படவேண்டும். சில சில கூட்டல்களும் சில சில கழித்தல்களும் மற்றவற்றினும் கடினமாக இருக்கும். ஒன்பதோடு ஆறைக் கூட்டுவதும்

ஒன்பதோடு ஏழைக்கூட்டுவதும் எட்டோடு ஐந்தைக் கூட்டுவதும் ஏழோடு எட்டைக் கூட்டுவதும் கடினமானவை. நாலோடு நாலும், ஒன்றோடு எட்டும் ஐந்தோடைந்தும் கூட்டுவது எளிது. கூட்டுவதற்குக் கடினமாயிருப்பது கழிப்பதற்கு எளிதாகவும் கூட்டுவற்கு எளிதாயிருப்பது கழிப்பதற்குக் கடினமாகவுமிருக்கும். (இதுபோலவே, பெருக்கலிலும் கடினமானவை உண்டு. ப—ர்.)

கடினமானவற்றிலேயே பழக்கம் அதிகமாகக்கொடுக்கவேண்டும். இதுவரை, பெருக்கலை ஒரு வரிசையாக வாய்ப்பாடமாகப் பாடம் செய்வது வழக்கம். ஏழொன்று ஏழுமுதல் ஏழ பன்னிரண்டு எண்பத்திநாலுவரை வரிசையாக ஒப்பிப்பதால் ஏழொன்பது இன்னதென்று திடீரெனச் சொல்லமுடியுமென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால், அப்படி வரிசையாகவே கேட்கப்படாமல், ஊடே பிடித்துக் கேட்கவும் அவற்றைச் சரியாகச் சொல்லும் திறமையை வளர்க்கவும் மற்றும் கூட்டல் கழித்தல் வகுத்தல் பயிற்சி தரவும் வேண்டிய தவசியம்.

ஈ பிரயோசனமான வேலை.

ஒவ்வொரு வகுப்புப் பாடத் திட்டத்திலும் பிரயோசனமானவேலைக்காகச் சில சுருக்கமான குறிப்புக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றை வகுப்புப் பாடத்திலோ சுய நோக்க (project) முயற்சியிலோ உபயோகிக்கலாம். ஓரே மாதிரிப் பொருளிலிருந்தோ பலவேறு மாதிரிப் பொருள்களிலிருந்தோ, சில சில பொருள்களை எடுக்கச் சொல்லலாம்; நிறுக்கச்சொல்லலாம்; பெரியது சிறியதாகப் பிரிக்கச் சொல்லலாம்; தட்டையாக இருப்பது கனமாக இருப்பதெனப் பிரிக்கச் சொல்லலாம்; காகிதங்களை வெட்டுவது மடிப்பது போன்ற வேலைகளையும் செய்யச் சொல்லலாம்.

உ. துணைகளும் கருவிகளும்.

அட்டைகள் கோலிகள் களிமண்ணால் செய்து பலவர்ணங்கள் தீட்டிய சிறு பந்துகள் மணிகள் தீக்குச்சிகள் கம்பி கயிறு கத்தரி போன்றவை முதல் வகுப்புக்குத் தேவையாயிருக்கும். ஒரு நூற்பந்து அடிக்குச்சி மாகாணிப்படி உழக்கு ஆழாக்கு முதலிய அளவுப்படி இரண்டாவது வகுப்புக்குதவும். திராசு நிறை வில் திராசு (Spring balance) போன்றவை ஒவ்வொரு வகுப்பிலும் அனேக சந்தர்ப்பங்களில் உதவக்கூடும். அதே மாதிரி அட்டை நாணயங்களும் முதல் வகுப்பிலிருந்து உதவக்கூடும். மூன்றாவது வகுப்பிலிருந்தேனும், குழந்தைகள் அளவு நாடாவை அழுக்காக்காமல் உபயோகிக்கக்கூடும். பள்ளிக்கூடத்திற்கே சொந்தத்தில் அளவு நாடா வாங்கமுடியாதென்றால், அதனையும் சங்கிலியையும் வேண்டும்பொழுது கிராமக் கணக்கப்பிள்ளையிடமிருந்து இரவல் வாங்கிக்கொள்ளலாம். அதே மாதிரி ஆள் நிறுக்கும் எந்திரமும் வேண்டியபொழுது இரவல் வாங்கிக்கொள்ளலாம். கரும்பலகையில் ஒரு பாகம்- ஒரு பக்கம், பாதியாகவே யிருக்கலாம். சதுர அங்குலங்களாகக் கோடிட்டிருப்பது இடவேலைக்கு மட்டுமல்ல; மற்றும் பத்திக் கணக்குகளுக்கும் உதவும்.

(தொடரும்)

---

7. சுகாதாரம் : குடும்ப வாழ்க்கை.

வெள்ளரிக்காயின் பெருமை

Dr. Menkel

காய்கறிக்குள்ளே, மக்கள் பச்சையாகத் தின்னுகிறவைகளில் வெள்ளரிக்காயும் ஒன்று. பொதுவாகக் கோடைக் காலத்திலேதான் அது கிடைக்கும். அது உடம்புக்குக் குளிர்ச்சி, சுகம். எனக்கு இலேசிலே வாயிலே சலம் ஊறுது; ஆனால், சாலையிலே யாராவது ஒரு

வெள்ளரிக்காயைத் தின்றுகொண்டு வருவதைக் கண்டால், எனக்கும் வெள்ளரிக்காய் தின்னவேண்டுமென்று ஆசை வந்துவிடும். அவன் வாயிலே அது இருக்கும்வரை, அவனுக்கு நடக்கிற சிரமம் ஒன்றும் தெரிவதில்லையென்று நான் எண்ணுவதுண்டு. ஞானிகள் என்னென்னவோ ஆசைகள் இருப்பதாகச் சொல்லுவார்கள்; ஆனால், வெள்ளரி ஆசையைப்பற்றிச் சொல்லுவாரில்லை. எனினும், அது ஒரு முக்கியமான ஆசை. ஒரு பழைய ஆசை. அது கடந்த ஈராயிர வருடங்களாக இருந்திருக்கிறது. அந்த ஆசையில்லாத சாதியோ தேசமோ கிடையாதென்னலாம். அதற்கு மதபேதம் கட்சி பேதமெல்லாம் கிடையா. வெள்ளரிக்காய் என்றால், எல்லாருக்கும் பிரியம். வைசர் அம்மையார் "ஒரு இந்து கிராமத்தின் ஆகார பதார்த்தங்கள்" என்ற தம்முடைய புத்தகத்திலே பின்வருமாறு சொல்லியிருக்கிறார். வெய்யிற் காலத்தில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பெரிய பெரிய வெள்ளரிப் பிஞ்சுகளைச் சுவாரசியமாகக் கடித்துத் தின்றுகொண்டிருப்பதைக் காணலாம். சாலையோரமாக இருக்கும் சிறிய கடைகளிலும் திருவிழாக் கடைகளிலும் அவை எங்கும் மலிவாகக் கிடைக்கும்.

இந்தியர்கள் வெள்ளரிக்காயைப் பச்சையாகமட்டுமல்ல; அதை இதர காய்கறிகளுடனும் வாசனைச் சரக்குகளுடனும் சேர்த்துச் சமைத்தும் சாப்பிடுகிறார்கள். வெள்ளரிக்காயிலே விசேடச் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன. கீழ்க்கண்ட வகுப்புவாரியைப் பார்க்கவும்.

புளியத்தைக் கண்டிப்பன.

சாம்பரம்	41·20	சத விகிதம்.
உவரம்	10·00	,, ,,
சுதையம்	7·30	,, ,,
நிலவியம்	4·45	,, ,,
இரும்பு	1·40	,, ,,
மொத்தம்	64·35	,, ,,

புளியத்தை உண்டாக்குவன:

எரியம்	17·45	சத விகிதம்.
கந்தகம்	5·90	,, ,,
சிலிகம்	7·00	,, ,,
பாசிகம்	5·60	,, ,,
மொத்தம்	35·95	,, ,,

பி, சி உயிர்ச்சத்துக்கள்.

வெள்ளரிக்காயிலே கனியப் (Mineral) பொருள்கள் மேலே சொன்ன முறைப்படி அடங்கியிருப்பதால், வைத்திய சாத்திரிகள் அது உடம்புக்கு நல்லதென்றும் அதற்கு மருந்துக்குணம் இருக்கிறதென்றும் அதை வெகுவாகச் சிலாகித்துப் பேசுகிறார்கள். வேறொன்றும் பார்க்கவேண்டாம். அதிலே எவ்வளவு சாம்பரம் இருக்கிறதென்பதை மட்டும் பாருங்கள். நூற்றுக்கு நாற்பத்தொரு பங்குக்கு மேலே! வெள்ளரிக்காயிலுள்ள சாம்பரம் இயற்கைச் சாம்பரம்; கரிமச் சாம்பரம் பார்ப்பதற்குக் கூழ்போல இருக்கும். இந்தச் சாம்பரம் மிகவும் முக்கியமான பொருள். எவ்வளவு முக்கியம் தெரியுமா? இரத்தத்திலுள்ள செவ்வுடலிகளை (Red blood cells) ஆக்குவதற்கு மற்றெந்தப் பொருள்களையும்விடச் சாம்பரம்தான் அதிக அவசியம்.

ஆயிரம் சிறெடை (gram) செவ்வுடலிகளில் கரிமமில்லா உப்புக்கள் கீழ்க்கண்ட விகிதப்படி அடங்கியிருக்கின்றன.

இரும்பு எரிகை.	0·998
சாம்பரக் கந்தகை.	0·132
சாம்பரப் பாசிதை.	3·079
சாம்பர எரிகை.	2·343
உவர எரிகை.	0·663
உவர பாசிதை.	0·314
சுதைய எரிகை.	0·094
நிலவிய எரிகை.	0·060

இன்னொரு காரியம். வெள்ளரிக்காயிலே புளியத்தைக் கண்டிக்கிற சத்து அதிகமாகவிருக்கிறது. அது 64·05 சதவிகிதம் இருக்க, வெள்ளரிக்காய் ஒரு உவர் பதார்த்தமாகும்.

அது இன்னொரு வகைக்கும் நல்லது. அது மூத்திரச் சுரப்பை அதிகரிக்கச் செய்யும்; மூத்திரக்கட்டை யறுக்கும்; அதைத் தாராளமாக ஓடப்பண்ணும். இதற்கு வெள்ளரிச் சாறு நல்லது. இந்தச் சாற்றைக் காரட், பீட், செலரி முதலியவற்றினுடைய சாறுகளுடன் கலந்து சாப்பிடுவது வாதத்தைக் கண்டிக்கும்.

வாதத்திற்கு இப்படிச் சாறுகளைச் சாப்பிடுகிற காலங்களில், தானியங்களையும் சருக்கரைகளையும் கொஞ்சமும் உபயோகிக்கக் கூடாது. இறைச்சி, மீன், கோழி, முட்டை, பயறு முதலிய பிசிதப் பொருட்களிலும் தினம் நாலு அவுணத்துக்குமேல் சாப்பிடக் கூடாது. வியாதி சுகமாகிறவரைக்கும் இப்படிச் செய்ய வேண்டும்.

வெள்ளரிக்காயை அதிகம் சாப்பிட்டுப் பாருங்கள். அதற்கு உணவுக் குணமும் மருந்துக் குணமும் இருக்கிறது.

(இதே கருத்துடன் ஆனால் சுருக்கமாக, நல்வழி 15—8—41உ Social welfare பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. கிராமதூதன் இரண்டாம் மலர் 271—272 ம் பக்கங்களையும் பார்க்க. ப—ர்.)

ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதார வாழ்க்கைக் குறிப்புக்கள்

I. புதினாக்கீரை.

1 அருசி யோடுவாந்தி யக்கினி மந்தங்
குருதி யழுந்துமலக் கோட்ட—லிரியுந்
துதியதன்று சோறிரங்குந் தோல்லுலகில்
புதியனல் மூலிபு கல். [நாளும்

அகத்தியர் குணவாகடம்.

இதனால், அருசி வாந்தி மந்தாக்கினி குருதி யழுக்கு மலக்கட்டு இவை நீங்கும்; உணவு செல்லும்.

2. வழக்கு:—

இதன் இலையைத் துவையல் செய்து உணவோடு அருந்திவர, அருசி, சர்த்தி, மந்தாக்கினி முதலியவற்றைப் போக்கி, மலத்தைக் கழிக்கும். பசியையுண்டு பண்ணும்.

குணபாடம். வைத்தியரத்தினம் முருகேச முதலியார்.

3. புதினாக் கீரையில் 83 சதம் ஈரமும் 4·8 சதம் பிசிதமும் ·6 சதம் கொழுப்பும் 1·6 சதம் கனியங்களும் 2 சதம் நாறும் 8 சதம் கரிநீரகைச் சத்துமிருக்கின்றன. கனியப் பொருள்களில் ·2 சதம் சுதையமும் ·08 சதம் எரியமும் 17·1 சதம் மிலாயிரச் சிரெடை இரும்பும் இருக்கின்றன. 100 சிரெடையில் 111 கனலியும் 2700 மூல அலகு உயிர்ச் சத்துமிருக்கின்றன.

Health Bulletin No. 23.

II 1. சிறு குழந்தையின் எலும்புகள் மிகவும் மெதுவாயிருக்கின்றன; ஆதலால், அவை கோணுதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். புதிதாகப் பிறந்த குழந்தையை எப்பொழுதும் ஒரே பக்கமாகக் கிடத்திவந்தால், தலைகோணிப் போம்; ஒரு பக்கத்து நெற்றி புடைத்துக் கொண்டு முன்னுக்கு வரும்; இன்னொரு பக்கத்து நெற்றி தட்டையாய்ப்போம். சிசுவை சிலமணிநேரம் ஒரே பக்கமாகப் படுக்கவைத்து, பிறகு இன்னொரு பக்கமாக மாற்றிப் போட வேண்டும். அதிக இளமையிலேயே சிறு குழந்தையை நிற்கவைத்தால், கால்கள்வளைந்து போகும்.

நல்வழி

2. தாங்கமுடியாத இன்பதுன்பங்கள் வரும்போது, உடம்பு உணர்ச்சியற்றுப்போகிறது. கோபதாபங்கள் அதிகமாயிருக்கும் பொழுது பசியே தெரியாமல் பலநாட்கள் பட்டினி கிடக்கவுமுடிகிறது. சந்தோசமாயிருக்கும்பொழுது நல்ல பசியுண்டாவதோடுகூட உடம்பின் எல்லா உறுப்புக்களும் தங்கள் தங்கள் வேலையைச் செவ்வையாய்ச் செய்கின்றன. மனதுக்கும் உடம்புக்குமுள்ள ஒற்றுமையை இந்த உதாரணங்கள் நன்கு விளக்குகின்றன.

நரம்புகளும் உடம்பும் செவ்வையாக இருக்க வேண்டுமென்றால், நாம் எப்பொழுதும் நீதியும் பரிசுத்தமுமான எண்ணங்களை எண்ணவேண்டும். தீய எண்ணங்களை எண்ணுவதால் மனம் மிகவும் கெட்டுப்போய்ப் பைத்தியமும் பிடிக்கலாம்.

நல்வழி.

3. நீண்டகாலம் வாழ அனுசரிக்கவேண்டியவை.

1. நாம் வசிக்கிற அறைகளில் நல்ல காற்றோட்டம் இருக்கவேண்டும்.

2. நம்முடைய வேலையையும் பொழுதுபோக்கையும் நாம் திறந்த வெளிகளில் வைத்துக்கொள்ளவேண்டும்.

3. கூடுமானால், வீட்டுக்கு வெளியே தூங்கவேண்டும்.

4. ஆழ்ந்த மூச்சு எடுத்துக்கொள்ள வேண்டும்.

5. பெருந்தீனியை ஒழிக்கவேண்டும்.

6. மாமிசத்தையும் காரஞ்சேர்த்த உணவுகளையும் குறைத்து உண்ணவேண்டும்; (கூடுமானால், ஒழிக்கவேண்டும்.

7. நன்றாகமென்று மெதுவாகச் சாப்பிடவேண்டும்.

8. மலம் அன்றன்றுடம் கழிக்க வேண்டும்.

9. நிற்கும்போதும் நடக்கும்போதும் உட்காரும்போதும் நிமிர்ந்திருக்கவேண்டும்.

10. பல்லிலும், எயிற்றிலும், நாக்கிலுமுள்ள அசுத்தத்தை நாள்தோறும் போக்கி, அவற்றைச் சுத்தமாக வைத்துவரவேண்டும்.

11. நச்சுப் பதார்த்தங்களும் நோய் தரும் கிருமிகளும் உடம்பிலே பிரவேசியாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

12. அளவுக்கு மிஞ்சி வேலை செய்யக் கூடாது. உடம்பு ஆயாசமாயிருக்கும் பொழுது இளைப்பாற வேண்டும். சந்தர்ப்பங்களுக்கேற்றபடி, ஏழு அல்லது ஒன்பது மணிநேரத்துக்குக் குறையாமல் தூங்கவேண்டும்.

13. கோபத்தையும் கவலையையும் போக்கி, சாந்தமான மனத்தோடு இருக்க வேண்டும்.

ஓர் அமெரிக்க சங்கம்.

III. கறவைப்பசுக்களுக்குத் தற்காப்புக்காகவும் பால் விருத்திக்காகவும் தீனிபோட்டு வரவேண்டும். தற்காப்புக்காக வேண்டிய தீனி பசுவின் நிறையைப் பொறுத்ததாகும். பால் விருத்திக்கான தீனியின் அளவு அது கொடுக்கும் பாலின் அளவைப் பொறுத்ததாகும். 800 இராத்தல் நிறையுள்ள பசுவிற்குப் போடும் தீனியைக்காட்டிலும் 1200 இராத்தல் நிறையுள்ள எருமைக்கு அதிகத்தீனியே போடவேண்டும். தீவனம் சத்துக்குறைந்ததாக இருக்குமென்றால், பாதுகாப்பிற்காகப் பிண்ணாக்குப் போன்ற சத்துணவும் (Concentrates) எருமைக்கு ஐந்து இராத்தலும், பசுவிற்கு மூன்று இராத்தலுமாக அந்தந்த மாட்டிற்குத் தக்கதாகக் கூட்டியோ குறைத்தோ சேர்த்து வரவேண்டும். பால் விருத்திக்காகக் காணம், பிண்ணாக்கு, தவிடு இவற்றை ஏற்றவாறு கலந்து மூன்று இராத்தல் பாலுக்கு ஒரு இராத்தலாகச் சேர்த்துவரவேண்டும். (காற்படி பால், ஓர் இராத்தல் நிறையிருக்கும். ப—ர்)

Bombay Information.

IV. ஒரு முதல்தரமான உணவுமா: முதலாவதாக நிலக்கடலைத் தோட்டையும் நிலக்கடலைப் பருப்பின் மேலிருக்கும் இலேசான தோலையும் எடுத்துவிட்டு அந்தப் பருப்பை உணர்ந்த மணலோடு கலந்து ஒரு இருப்பு வாணலியில் போட்டு இளம் வறுவலாகப்பருப்பு மஞ்சள் நிறம் கொடுக்கும்வரை வறுத்து, பின் பருப்பைத்தனியாகப் பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டும். அதே மாதிரியாக அரிசி மாவையும் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கொஞ்சமும் ஈரமில்லாமலும் இலேசான மஞ்சள் நிறம் கொடுக்கும் வரையிலும் வறுத்துக் கொள்ளவேண்டும். பிறகு நிலக்கடலைப் பருப்பை உரலில் போட்டுப் பொடித்துண்டுகளாக்கிக் கொள்ளவேண்டும். பிறகு அவற்றைப் பலகை

யிலெடுத்துப்போட்டு மாவாக்கவும் வேண்டும். அதன்பின் அரிசிமா மூன்றுபங்கு நிறைக்கு நிலக்கடலைமா இரண்டு பங்காகச் சேர்த்து அவற்றில் இருபதில் ஒரு பங்கு சருக்கரையையும் சேர்த்து நன்றாகக் கலந்துகொள்ள வேண்டும். இந்தக் கலவை மா பார்க்கவும் நன்றாக இருக்கும்; வாய்க்கு வெகு உருசியாகவும் இருக்கும். இதைப் பச்சையாகவும் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு தின்னலாம். தண்ணீர் விட்டுப் பிசைந்துகொண்டும் தின்னலாம். குழந்தைகள் வெகு பிரியமாகத் தின்பார்கள். அரிசி மாவுக்குப் பதிலாக சோளமா அல்லது மக்காச் சோளமாவையும் சருக்கரைக்குப் பதிலாகத் தேனையும் சேர்த்துக்கொள்ளலாம். இதனைத் தகர டப்பாக்களில் போட்டு வைத்து வருவதில், இந்த மா இரண்டு மாதம் வரை கெட்டுப் போகாதிருக்கிறது. (மண் சாடியில் போட்டு மூடிவைத்தால், இன்னும் அதிக காலம் கூடக் கெட்டுப்போகாதிருக்கலாம். ப—ர்.)

Indian Farming.

---

8. கிராமவாசிகள் : விபசாயிகள்.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் V)

விபசாயிகளின் வறுமைக்கு அவர்களுடைய அதிகச் செலவா காரணம்?

நம்நாட்டின் கிராமாந்தரப் பொருளாதாரத்தைப்பற்றி எழுதுகிறவர்களெல்லாம், 'விபசாயிகள் கலியாண காலத்திலும் மற்றும் சடங்குகளிலும் கடன் வாங்கியும் அதிகமாகச் செலவழிக்கிறார்கள்; அப்படி வாங்கிய கடனைக் கொடுக்க முடிகிறதில்லை; அதனால்தான் கடன் வளர்ந்துவிடுகிறது' என்று எழுதுகின்றனர்.

விபசாயிகள் வீண் செலவு செய்வதிலும், முன்பின் எண்ணிப்பாராமல் செய்கிறார்களென்றும் பல வேறுவிதமாக அவரவர்களுக்குத் தோன்றியபடியெல்லாம் எழுதுகின்றனர். உண்மையில், இவர்களில் எவரும் விபசாயிகளோடு நெருங்கிப் பழகியதில்லை; அவர்களுடைய மனப்போக்கையும் நினைவுகளையும் தெரிந்ததுமில்லை. அவர்களோடு நெருங்கிப் பழகாதவர்கள், முன்பின் எண்ணிப்பாராமல் செலவழிக்கிறார்களென்று அவர்களைச் சொல்லுவதெப்படி? அதிக விலை கொடுத்து நிலங்களை வாங்கிவிடுகிறார்களென்றும் அவர்களைத் தூற்றுவதெப்படி? மனிதன் ஓர் எந்திரமல்ல; கால்கைகளோடு ஓடியாடித் திரிகிறவன்; அவன் சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் சமய அனுஷ்டானங்களுக்கும் மற்றும் அனேகக்கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவனாக இருக்கிறான். அதனால், மற்றவர்களைப்போலவே அவனும் தானுமறியாமலே தவறக்கூடும்; நிரம்பப் படித்தவர்களும் அப்படித் தவறுகிறார்கள். காரியமில்லாத பட்டங்களையும் பதவிகளையும் பெறுவதற்காக, பணத்தைத் தண்ணீரைப்போல வாரி இறைக்கிறார்கள். அப்படி வீண்செலவு செய்கிறவர்களையெல்லாம் குற்றம் சொல்லாமல், விபசாயிகளைப்பற்றி மட்டும் சொல்லும்பொழுதுதான், நமக்கு வருத்தம் மேற்படுகிறது. விபசாயிகள் ஏழைகளாக எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக அற்ப சொற்ப வரவேயுள்ளவர்களாக இருக்கிறார்களென்று, வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று அவர்களைப்பற்றி எவரும் குறை சொல்லுகிறதா?

விபசாயிகள் வாழ்க்கை ஓயாத உழைப்பு, ஒரேமாதிரியான உழைப்பு, கடினமான உழைப்பாக இருக்கிறது. விடிந்தெழுந்திருந்தால், பின் இருட்டும்வரை ஒரேமாதிரியாகத் தம்

பொழுதைக் கழிக்கவேண்டியதாக இருக்கிறது. சில காலங்களில் இரவிலுங்கூட நிலங்களிலேயே காவலுக்கும் விழித்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. தூங்கப்போகும் பொழுதுகூட, தன் பண்ணை பாட்டத்தைப்பற்றிய கவலையில்லாமல் தூங்கப்போவதில்லை. பட்டினங்கள் நகரங்களின் ஆரவாரங்களுக்கெல்லாம், அவர்கள் ஒதுங்கியே இருக்கிறார்கள். வெளியுலகத்தைப்பற்றி அவர்கள் ஏதேனும் தகவல் தெரிகிறதென்றால், அவர்களில் யாராமொருவர் அயலூருக்குப் போயிருந்தபொழுது வாங்கி வரும் பழைய பத்திரிகையில் கண்ட தகவல் தான். அவர்கள் படித்தவர்கள் பேச்சையும் பிரசங்கங்களையும் கேட்பதுவும் அபூர்வம். அவர்கள் நாடகம் புகைப்படக்காட்சி மற்றும் உல்லாசப் பொழுது போக்குகளையும் அறிவதில்லை. இப்படியாக, கடினமான உழைப்பும் சங்கடங்களுமே தங்கள் பங்காக வாழ்வைக் கடத்திவரும்பொழுது, நல்வினைப்பயனாக ஏதேனும் ஒரு கலியாணம் அல்லது விசேடம் வந்தால் அந்த மகிழ்ச்சியிலே முன்பின் எண்ணிப் பாராமல் கொஞ்சம் அதிகச்செலவு செய்துவிட்டால், அஃது அத்துணை பழிக்கத்தக்க பெரிய குற்றமாகுமா? தங்கள் வாழ்நாளெல்லாம் கூடி அப்படி ஒரு சந்தர்ப்பமே வாய்க்கக் கூடியதாயிருக்கலாம். அப்படி ஒரு சந்தர்ப்பத்திலும், வெகுதூரத்திலிருந்தும் வரும் தங்கள் உற்றார் உறவினரோடும் உண்டு உடுத்திக்களிப்பதுவும் கூடாதா? எவரும் தன் சத்திக்கு மிஞ்சி நிதானமில்லாமல் செலவழிப்பது கூடாது தான்; என்றாலும், இப்படியொரு சந்தர்ப்பத்திலே கொஞ்சம் அதிகமாகச் செலவழித்துவிடுவதையும் கண்டிக்க நம்முடைய மனம் ஒருப்படவில்லை. விபசாயிகளுடைய காரியங்கள் எதிலும் கொஞ்சமும் அக்கறை யெடுத்துக்கொள்ளாதவர்களுக்கு, அவர்களைப்பற்றிக் குறைசொல்லுவதற்குமட்டும் என்ன உரிமையிருக்கிறது? எப்பொழுதேனும் அவர்களிருக்குமிடம்போய் அவர்களுடைய நிலைமையைத் தெரிந்திருக்கிறார்களா? அவர்களுடைய நிலைமையைத் திருத்த உதவி யிருக்கிறார்களா? அவர்களுடைய அறியாமையைப் போக்கியிருக்கிறார்களா? இல்லை. தங்களுடைய வீட்டுக் கலியாணங்களில் குறைவாகச் செலவு செய்தேனும், அவர்களுக்கு முன் மாதிரியாக நடந்து கொள்ளுகிறார்களா? அப்படியெல்லாம் செய்யாதவர்கள், ஏன் விபசாயிகளைப் பழித்துப் பேசவேண்டும்?

இப்பொழுது அதிகச்செலவாகக் காணப்படும் விபசாயிகளின் பழக்கவழக்கங்கள், அவர்கள் செழிப்பாக வாழ்ந்த காலத்தில் ஏற்பட்டவை. அந்தக்காலங்களில் தானியங்களுக்குக் குறைவிருந்ததில்லை; பாலும் தயிரும் வெண்ணெய்யும் நிறைய இருந்தன. அப்படிக் காலத்தில் உற்றார் உறவினரை யழைத்து மகிழ்ந்திருப்பதை எவரேனும் குற்றஞ் சொல்ல முடியுமா?

படித்தவர்கள் தங்கள் நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் விருந்துகள் நடத்துகிற மாதிரி, கிராமங்களிலே தங்கள் வாழ்க்கையிலேயே ஏதோ ஒருநாள் ஒரு விபசாயி ஒரு விருந்து நடத்திவிடக்கூடாதா? நம் முன்னோர்கள் செழிப்பாக வாழ்ந்துவந்த இந்நாட்டில் இப்படி உடுத்தத் துணியும் உண்க உணவுமில்லாமல் அரைவயிறும் கால் வயிறுமாகக் காலங் கழிக்கவேண்டியது வருமென்று நாம்தான் நினைத்தோமா? இன்றுந்தான் அவற்றை ஒழிக்கவேண்டுமென்று கவலைப்படுகிறோமா?

விபசாயிகள் தங்களுடைய பழைய கெட்ட வழக்கங்களையெல்லாம், ஒழிக்கவேண்டியது தான்; என்றாலும், அப்படி ஒழிக்காததற்காக அவர்களை நாம் பழிக்கவுமாட்டோம். மகிழ்ச்சியே யில்லாத வாழ்க்கையால் ஆயுளே கட்டையாய்விடுமென்றாலும், வீண்செலவுகளால் ஏற்படும் சிரமத்துக்காகவேனும் வீண்செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டியதுதான். இந்த அற்ப மகிழ்ச்சியையும் அவர்களிடமிருந்து எடுத்துவிடுவதென்றால், வேறு உல்லாசப்பொழுது போக்கிற்கான ஏற்பாடேனும் செய்யவேண்டாமா? அதனால் ஏற்படும் செலவு இதனினும் அதிகமாகுமென்றால், இதனோடு நிற்கலாமல்லவா?

நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதினால், சிலருக்குக் கடன்கள் ஏற்பட்டும் வளர்ந்தும் கொடுக்க முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால், இதுவே வறுமைக்கோ கடன் வளர்ச்சிக்கோ காரணமென்று சொல்லிவிட முடியாது. நம் நாட்டிலே, உதாரணமாக ஐக்கிய மாகாணத்தில், நிலமுடையவருக்கே ஒரு தனி மதிப்பேற்பட்டிருக்கிறது; நிலத்தை விற்பதென்றால், அதனால் ஒரு கேவலமும் ஏற்படுகிறது. இதனால் நிலமில்லாதவன் நிலத்தை வாங்க ஆசைப்படுகிறான்; நிலம் வைத்திருக்கிறவன் விற்கத் தயங்குகிறான். இதனால் நிலவிலை ஏறுகிறது.

நிலவிலை ஏறுகிறதற்கு அஃதொன்றே காரணமல்ல. விபசாயிகளுக்கு ஏகதேசமே நல்லகாலம் பிறக்கிறது; அப்பொழுது மிஞ்சும் பணத்தையும் சேமித்துவைப்பதற்கு நிலம் வாங்குவதைத்தவிர வேறு வழியில்லை. அப்படியொரு சந்தர்ப்பத்திலும் அடுத்தவர் ஒருவர் கொடுத்து வாங்கக்கூடியதைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமே கொடுத்துவிட்டால், முழுகிப்போவதென்ன? இப்போதைய மந்தத்தை வைத்து நாம் ஒருவித முடிவுக்கும் வரக்கூடாது. அப்படி அதிகப்பணம் கொடுத்தாவது வாங்கவேண்டியதும் ஒருசமயம் அவசியமாகலாம். அப்படிச் சந்தர்ப்பங்களில் எவரும் படித்தவர்களும்கூட அவ்விதமே நடக்கக்கூடும். அதிக அறிவும் அனுபவமும் கல்வியும் பொருளாதார உணர்ச்சியும் உடையவர்களுமே, விபசாயிகள் தங்கள் வாழ்நாளெல்லாம் கழிக்கும் நிலைமையில் மூன்று வருடங்கள்கூடக் கழித்துக் கொள்ளமாட்டார்கள். இவ்வளவு துணிவாகச் சொல்லுவதைக்கேட்டு, அப்படியும் இருக்குமாவென்று நீங்கள் திகைக்கலாம்; ஆனால், இஃது உண்மை. நாம் கண்ணாரக் கண்டவற்றை வைத்துச் சொல்லுகிறோம். விபசாய இலாகாவிலேயே வேலைபார்த்தவர்கள் விபசாய அனுபவம் மிகுந்திருந்தும் தங்களுடைய உத்தியோக காலத்துக்குப்பின் தங்கள் நிலங்களைக் கூடச் சாகுபடிசெய்யத் துணியாமல், வேறெங்கேனும் வேலை கிடைக்காதாவென் றல்லவோ திரிகிறார்கள்! விபசாயிகளின்பாடு கடுமையாக இருந்தாலன்றி, அப்படிச் செய்வார்களா? படித்தவர்கள் ஏன் விபசாயம் செய்கிறதில்லையென்று நம்மைக்கேட்டால், போட்ட முதலும் போய் உழைப்பும் பிரயோசனமில்லாமல் போவதுதான் காரணமென்று சொல்லுவோம்.

விபசாயிகள் கடினமாகப் பொறுமையுடன் வேலைசெய்வதுமட்டுமல்ல; செய்முறைகளிலும் செட்டாகவே இருந்து வருகிறார்கள். சாதாரணமாக, அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் வெகுசெட்டாகவுமிருந்துவருகிறார்கள். நாம் மேலே சொன்னதுபோல, கலியாணமெல்லாம் ஏகதேசமே வரக்கூடும். வங்காள மாகாண விசாரணைக்கழகமும் (The Bengal Provincial Enquiry Committee) மத்திய பாங்குக்கழகமும் (The Central Banking Committee) கலியாணச் செலவும் அது போன்ற சடங்குகளின் செலவுகளும் விபசாயிகளின் கடன் பளுவிற்கு முக்கிய காரணங்கள் அல்லவென்ற முடிவிற்கே வந்திருக்கின்றன. வயிறுநிறையச் சாப்பிடுவதற்கில்லாத விபசாயிகள் அதிகச் செலவு எவ்வளவுதான் எப்படித்தான் செய்துவிட முடியும்?

(தொடரும்.)

9. கதை : சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

(ஒரு தால்சுடாய் கதை : தமிழ்நாடிற்கேற்பச் சற்றே மாற்றியது.)

VIII

பேச்சிமுத்தைவிட்டுப் புறப்பட்ட குட்டிச்சாத்தான், நல்லதம்பியிடம் ஒரு தளகர்த்த வேடத்துடன் போய்ச்சேர்ந்தது. அவனிடம், 'பட்டாளம் ஒன்று வேண்டாமா? பட்டாளமில்லாத அரசன், என்ன அரசன்? எனக்குக் கட்டளைகொடுத்தால், உம்முடைய சனங்களிலிருந்தே ஒரு பட்டாளத்தைச் சேர்த்துவிடுகிறேன்' என்று சொன்னது. 'எனக்கு நல்ல பாட்டுகள் பாடுவதைக் கேட்கப் பிரியம். நீ பட்டாளம் சேர்ப்பது சரி, நீ அவர்களுக்குப் பாடக் கற்றுக்கொடு!' என்று சொன்னான் நல்லதம்பி. அது நாடெல்லாம் சுற்றி ஆட்களைத் திரட்டிப் பார்த்தது; பட்டாளத்துக்கு வருவார் ஒருவருமில்லை. அதன்மேல் நல்லதம்பியிடம் வந்து, 'ஒருவரும் சேருகிறார்களில்லை; சேரச் சொல்லி கட்டாயப்படுத்த வேண்டு'மென்றது. அப்படியும் செய்து பார்! என்றான் நல்லதம்பி. அதன்மேல், பட்டாளத்தில் சேராதவர்களைத் தூக்கிலிடப்படுமென்று விளம்பரம் செய்தது. சனங்கள் திரள்திரளாகக் கூடினார்கள்; 'பட்டாளத்தில் சேர்ந்தால், என்ன கிடைக்கும்? சேர்ந்தாலும் சாகத்தானேபோகிறோம்' என்றார்கள். 'ஆமா, அப்படியுந்தான் சில சமையம் நடக்கு'மென்று சொல்லியது குட்டிச்சாத்தான். 'எப்படியும் சாகிறதேயாயிற்று. நாங்கள் பட்டாளம் சேருவதில்லை, வீட்டிலிருந்தபடியே, சாகிறோ'மென்றார்கள். அதற்கு அந்தக் குட்டிச்சாத்தான் 'முழுமுட்டாள்களே! சண்டைக்குப் போகிறவர்களெல்லாம் செத்தா போவார்கள்? ஆனால், நீங்கள் பட்டாளத்தில் சேரவில்லையென்றால் சாவது நிச்சயம்!' என்றது. அதன்மேல், சனங்கள், எங்களரசனையே கேட்டுவருகிறோமென்று நல்லதம்பியிடம் போய்க்கேட்டார்கள். அவனைக்கேட்கவும், அவன் சிரித்துக்கொண்டு, 'என் ஒருவனால் உங்களெல்லாரையும் எப்படிக் கொல்லமுடியும்; எனக்கே தெரியவில்லை' என்றான். இதைக் கேட்டதும் குட்டிச்சாத்தானிடம்போய், 'நீர் செய்கிறதைச் செய்துகொள்ளலாம்; நாங்கள் சேரமாட்டோம்' என்று சொல்லிவிட்டார்கள்.

இவனிடம் நம் குண்டு சாயாது; இவனை எதிர்த்து வேலைசெய்ய வேண்டுமென்று சொல்லி, குட்டிச்சாத்தான் பக்கத்தரசனிடம் போய்ச் சேர்ந்தது. அவனை இந்த நாட்டோடு சண்டையிடத் தூண்டியது. அவனும் பணமில்லாத நாட்டைப் பிடித்தென்னவென்று சொல்லிப் பார்த்தான். 'தானியங்களும் கன்றுகாலிகளும் நிறைந்த நாடல்லவா, அது? அவைதான் மேழிச்செல்வம்; மேழிச்செல்வம் கோழைபடாது. அதனைக்கைப்பற்றுவதே நம் திறமையும் காட்டும்' என்று சொல்லி அரசனைத்தேற்றி அவனுடைய பட்டாளத் தளகர்த்தனாகக் குட்டிச்சாத்தான் புறப்பட்டது. நல்லதம்பி நாடும் வந்து சேர்ந்தது; ஆனால், எதிர்த்துவரும் பட்டாளம் ஒன்றையும் காணவில்லை. சும்மா இருப்பதேனென்று பல கிராமங்களைப் பிடிக்கச் சொல்லியது. அதன் வீரர்கள் நல்லதம்பி நாட்டிலுள்ள தவசங்களையும் கன்றுகாலிகளையும் கைப்பற்ற ஆரம்பித்தனர். அதனையும் ஒருவரும் தடுக்கவில்லை. அப்படியே, மறுநாள் இன்னொரு கிராமம் போயும் செய்தார்கள். அப்படியே போன போன இடங்களிலெல்லாம் எவரும் தடுக்கவில்லை. அது, மட்டுமல்ல; 'தவசத்தைக் கொண்டுபோய் என்ன செய்யப்போகிறீர்கள்? அது உங்களுக்குச் சோறாகிவிடுமா? எதுவேண்டுமென்றாலும் கொண்டுபோங்கள்; சாப்

பிட்டுப்போங்கள்' என்று உபசாரமும் செய்தார்கள். இப்படியாக, இது ஒரு வேடிக்கைச் சண்டையாகிவிட்டது. குட்டிச்சாத்தானின் சேனுவீரர்களெல்லாம் இப்படிக்கொள்ளையடிக்கமாட்டோமென்றார்கள். நீங்கள் கொள்ளையடிக்க மறுத்தால், நான் உங்களையெல்லாம் கொன்றுவிடுவேனென்று பயமுறுத்தியது. அதன்மேல், தவசங்களையும் வீடுகளையும் கொளுத்தி எரித்தார்கள். ஆடு மாடுகளைக் கொன்றார்கள். அப்பவும் எவரும் தடுக்கவில்லை; எல்லாரும் ஏகமாய் அழுதார்கள். நல்லபொருள்களை ஏன் நாசமாக்குகிறீர்கள்? உங்களுக்கு வேண்டுமென்றால் கொண்டுபோங்களேன்! என்றார்கள். அதற்குமேல், அந்த வீரர்களின் மனம் ஒன்றும் செய்யத்துணியவில்லை; பட்டாளத்திலிருந்து தாங்களாகவே கலைந்து ஓடிவிட்டார்கள்.

IX

பட்டாளத்தைக்கொண்டு, நல்லதம்பியை குட்டிச்சாத்தானுல் செயிக்கமுடியவில்லை; என்றாலும், அவனைத் தோற்கடிக்காமல் போவதில்லையென்று கங்கணங் கட்டிக்கொண்டது. அவனிடம், அதன்பின், ஒரு பிரபுவாகப் போய்ச் சேர்ந்தது. "உனக்குப் புத்தியில்லை; நல்ல புத்திவருத்த விரும்புகிறேன்.' உன் ஊரிலேயே ஒரு வீடுகட்டி வியாபாரம் செய்ய உத்தேசித்திருக்கிறேன்'' என்று நல்லதம்பியிடம் சொல்லியது. நல்லதம்பியும், அது நல்ல காரியந்தான்; இங்கேயே வந்து குடியிருமென்று சொன்னுன்.

மறுநாட் காலையில், குட்டிச்சாத்தான், ஊர் மந்தையில் போயிருந்துகொண்டு, 'நீங்கள் ஏன் கழுதைகள்போலிருக்கிறீர்கள்? உங்களுக்குச் சுத்தமாக,சுகமாக இருக்கத் தெரியவில்லையே! நான் சொல்லுதிறபடி, எனக்கு ஒரு வீடு கட்டித்தாருங்கள்; உங்களுக்கு நல்ல கூலியும் தருகிறேன்' என்று தன்னிடமிருந்த பணத்தையும் காட்டியது.

அந்தச் சனங்களும் அப்படியே கூலியைப் பெற்று அதற்காக ஒரு வீடும் கட்டிவந்தார்கள். குட்டிச்சாத்தானின் மகிழ்ச்சிக்கு அளவில்லாது போயிற்று. 'எப்படியும் நல்லதம்பி இப்பொழுது அகப்பட்டுக்கொள்ளுவான்' என்று குதித்தது.

குட்டிச் சாத்தான் வந்த சில நாளைக்கெல்லாம் அந்த ஊரெங்கும் பணம் மலிந்து போயிற்று. நகை செய்து போட்டுக்கொள்ளுவோரும் போட்டுக்கொண்டார்கள்; குழந்தைகள் தெருவில் விளையாடுகிறதற்கும், பவுன்கள் தான் உதவின. பணம் மலிந்ததும் ஒருவரும் வேலைக்கு வரவில்லை. குட்டிச் சாத்தான் கட்டடமும் கட்டி முடியவில்லை. அதற்குண்ணத் தானியமும் விலைக்குக் கேட்டுப் பார்த்தது; கொடுப்பாரில்லை. ஒரு அறுதலி வீட்டிற்குப் போய், ஒரு பவுனைக் கொடுத்து ஒரு மீன் கேட்டது. 'அதற்கு அவள் அதை வைத்து விளையாட எனக்குப் பிள்ளைகளில்லையே! உன் பவுன் எனக்கு எதற்குதவும்?' என்று சொல்லிவிட்டாள். பிறகு, ஒரு சமுசாரி வீட்டிற்குப் போய் உரொட்டி விலைக்குக் கேட்டது. 'எனக்குப் பணமொன்றுந் தேவையில்லை; ஆனால், நீ பிச்சையாகக் கேட்டால், உனக்கொரு துண்டு உரொட்டி தரச்சொல்லுகிறேன்' என்று அவன் சொன்னுன். அம்மட்டில் குட்டிச்சாத்தான் அவன் மேல் காறித்துப்பிவிட்டு ஓடிவிட்டது. ஆக, உரொட்டி கிடைக்கவில்லை. எங்குப் போனுலும் பணம் மலிந்திருந்தது; பணத்திற்குச் செலவில்லை. 'வந்து எதும் வேலையைப் பாரும்; வேறெதும் கொண்டுவாரும்; அல்லது பிச்சையாகக்கேளும்.' என்றே ஒவ்வொருவரும் சொன்னார்கள். 'பணந்தருகிறேனென்கிறேனே; அதைக்காட்டிலும் உங்களுக்கு என்னவேண்டும்? அதைக்கொண்டு என்னவேண்டுமென்றாலும் வாங்கலாமே' என்று சொல்லிப்பார்த்தது. எங்களுக்குத் தீர்வையுமில்லை; பணத்திற்கு, வேறு செலவுமில்லை; ஆகையினுல், எங்களுக்

குப் பணம் தேவையுமில்லை' என்று ஒவ்வொரு வரும் சொல்லிவிட்டார்கள். இப்படியாகக் குட்டிச்சாத்தான் பட்டினியாகக் கிடக்க நேர்ந்தது.

“நம்மூருக்கு ஒருவன் புதிதாக வந்திருக்கிறான்; அவன் நல்ல உடை உடுத்தித் திரிகிறான்; வேலைசெய்ய விளைகிறானில்லை; பிச்சை கேட்பதுவும் குறைவென்று நினைக்கிறான்; இப்படியாகப் பட்டினியாகக் கிடக்கிறான்” என்று நல்லதம்பியிடம் ஊரார்போய்ச் சொன்னார்கள். அதன்மேல், அயலூர்க்காரனைப் பட்டினியாய்ப் போடுவது நமக்கழகல்ல. வீட்டுக்கொருநாள் முறைபோட்டுச் சாப்பிட்டு வரட்டுமென்று நல்லதம்பி சொன்னான். அப்படியே குட்டிச்சாத்தானும் சாப்பிட்டுவந்தது. கடைசியாக, நல்லதம்பிமுறைவந்து சேர்ந்தது. அவன் வீட்டில் சாப்பிட்டுப்போகக் குட்டிச்சாத்தானும் வந்து உட்கார்ந்தது. அவன் தங்கை வாழ்வரசி குட்டிச்சாத்தான் கையைப் பிடித்துப் பார்த்தாள். கைவேலைசெய்த கையாக இல்லை; பூப்போல் மெதுவாக இருந்தது; அம்மட்டில் எழுந்திருந்து தனியேபோய் நிற்கும்படி குட்டிச்சாத்தானைச் சொன்னாள். நல்லதம்பியின் மனைவியும், அதனைப்பார்த்துக் கோபித்துக் கொள்ளவேண்டாம்; அது எங்கள் வீட்டு வழக்கம். உழைப்பாளிகள் சாப்பிட்டபின் மிச்சமிருந்தால் நீங்கள் சாப்பிடலாம் என்று சொல்லி அதனைத் தேற்றினாள். குட்டிச்சாத்தானுக்குத் தன் கோபத்தை அடக்க முடியவில்லை. 'இந்தச் சட்டமெல்லாம், நீ முட்டாள்தனமாகச் செய்ததல்லவா? புத்திசாலிகளெல்லாம் கையினாலா வேலைசெய்கிறார்கள்?' என்று நல்லதம்பிமேல் சீறிவிழுந்தது. அதற்கு, அவன் 'புத்திசாலிகள் வேலைசெய்கிறமாதிரி, முட்டாளுக்கு எப்படித்தெரியும்? நாங்கள் முதுகால் சுமக்கிறோம்; கைகளால் வேலை செய்கிறோம். அதுதான் எங்களுக்குத் தெரியும்' என்று சொன்னான். 'மூளையால் எப்படி வேலைசெய்கிறதென்று உங்களுக்குக் காட்டுகிறேன்; மூளையால் வேலைசெய்வது எளிதல்ல. அதன் அருமை உங்களுக்குத் தெரிந்திருந்தால், என்கையைப் பிடித்துப் பார்த்துச் சோறு இல்லையென்று சொல்லமாட்டீர்கள். என்று குட்டிச்சாத்தான் சொல்லியது. 'இலேசாகக் கைகளால்வேலைசெய்து வயிற்றை வளர்க்கக்கூடியபொழுது அப்படிமூளையைக்கொண்டு, கடினமாக வேலை செய்வானேன் என்று எனக்குச் சந்தேகமாகத் தோன்றுகிறது' என்றான் நல்ல தம்பி. 'முட்டாள்களிலும் இப்படி வடிகட்டின முட்டாள்களுண்டா? மூளையின் அருமை தெரியாத முட்டாள்கள்! உங்களைப் பார்க்கவும் பரிதாபமாக இருக்கிறது; உங்கள் மத்தியிலிருக்கவும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஆகையால்,மூளையின் அருமையை உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டுப் போகலாமென்றிருக்கிறேன். ஊராரெல்லாரையும் கூட்டுங்கள்; கோபுரத்தடிக்கு வந்துசேரச் சொல்லுங்கள். நான் கோபுரத்திலேறி நின்று பிழைக்கும் வழியெல்லாம் சொல்லுகிறேன்' என்றது. சனங்கள் திரள்திரளாக வந்தார்கள். குட்டிச்சாத்தானும் கோபுரத்திலேறியது. கைகளால் வேலைசெய்யாமலே, எப்படியெல்லாம் பிழைக்கலாமென்பதைப்பற்றி நூற்றுக்கணக்கான யோசனைகளைப் புதிது புதிதாகச் சொல்லிக்கொண்டிருந்தது. ஊராருக்கொன்றும் புரியவில்லை. குட்டிச்சாத்தான் மூளையைக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டதா இல்லையா என்றுகூட அவர்களால் தெரியமுடியவில்லை. மூளையால் வேலைசெய்யக்கூடிய குட்டிச்சாத்தானுக்கும் வயிறு பசிக்கும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. குட்டிச்சாத்தானோ பசி பொறுக்கமுடியாமல் கிறங்கிப்போய்க் கோபுரத்தினின்றும் தவறிவிழுந்தது. உருப்படிக்கே மோசமாகப்போய்விட்டது. அம்மட்டில், ஊராரும் கலைந்து போய்விட்டார்கள்.

(முற்றிற்று.)

10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான செளகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் III)

பணவசதி.

பணமின்றிக் கைத்தொழில் விருத்தியாகக் கூடியதில்லை; ஆகையால், பணவசதியும் வேண்டும். புதிதாக ஒரு தொழில் ஆரம்பிக்கும் பொழுது, அதில் பலவிதமான இடைஞ்சல்கள் வரலாம்; நட்டங்களும் நேரலாம். தொழில் முடங்காமல் செய்துகொண்டிருக்கப் போதிய பணமில்லாது போனால், நட்டங்கள் அதிகமாகவுங் கூடும்; என்றாலும், பணமிருந்தால் மட்டும் போதாது; வெற்றிகரமாக வேலை செய்வதற்கான மற்றும் பல செளகரியங்களும் அமையவேண்டும்.

'கைத்தொழிற் சட்டம் முன்னிருந்தபடி, புதிய அல்லது திடம்பெறாத தொழில்களுக்கும், தொழில் விருத்தி யில்லாத இடங்களில் புதிதாகத் தொழில்களை யாரம்பிக்கவும், குடிசைத்தொழில்களுக்கும் இம்மூன்று வகைக்கு மட்டுமே உத்திசெய்யக்கூடும். இப்பொழுது பழைய கைத்தொழில்கள் அல்லது சரியாக நடந்துகொண்டிருப்பதற்கும் விசேட காரணங்களிருக்குமென்றால், அவசியமான பொழுது உதவி செய்யலாம். இதற்குமுன் ரூ. 1000த்துக்குட்பட்ட விடுமுதல் கொண்டு செய்யும் தொழில்களுக்கிருந்த நிபந்தனைகளை ரூ. 2000க்கு மேற்படாத தொழில்களுக்கென்றும் மாற்றப்பட்டிருக்கிறது. குடிசைத் தொழிலென்பதை முன் இடைத்தரகர்கள் முதலாளிமார்கள் இலாபமடைவதற் கில்லாத தொழில்களென்று குறிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது வீடுகளிலிருந்து வேலைசெய்து வரவேண்டும்' என்பதொன்றே வற்புறுத்தப்படுகிறது. தரகர் தடையும் நிவர்த்திசெய்யப்பட்டிருக்கிறது. குடிசைத் தொழிலுக்கு என்ன வகைக்கும் உதவுகிறதென்றும் கிராமத்தொழிலுக்கு அதாவது பூராவுமாகவோ அல்லது சில நேரமோ கிராமத்தார் செய்யும் எதொரு தொழிலுக்கும் அவசியமானபொழுது உதவுகிறதென்றும் திருத்தப்பட்டிருக்கிறது. மாகாண அரசாங்கம் தீர்மானிக்கிறமாதிரி கிராமத்தொழிலுக்கு உதவலாமென்றும் திருத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தங்களெல்லாம் செய்தித்தாள்களிலும் அரசாங்கச்சில்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன. துண்டுப் பிரசுரங்களாகவும் அச்சிட்டுத் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. வட்டியும் $6\frac{1}{2}$ சதமானத்திலிருந்து 5 சதமானமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. உதவிகேட்டுவரும் மனுக்களும் முன்னிலும் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன.

பொதுவாக, ஆரம்பத்திலிருந்தே நன்றாக நடந்துவரும் சிறுதொழில்களுக்குப் பணஉதவி செய்வதால் மிகுந்த நன்மையுண்டு; வேலையில்லாத்திண்டாட்டம் குறையும்; தொழில்களும் விருத்தியாகும், ஆனால் சிறு தொழில்களுக்கு மட்டும் உதவினால் போதாது. சிறு தொழில்கள் மத்தியதரத் தொழில்கள் பெரிய தொழில்கள் எல்லாமே விருத்தியாக நடந்துவருவது தான் நாட்டிற்கு நன்மையாகும். அரசாங்கமோ பெரிய தொழில்களுக்கு உதவிசெய்துவரக்கூடியதில்லை. வியாபாரப் பாங்குகளும் பெரிய தொழில்களுக்குக் கடன் உதவிவரச் சிரமப்படும். நிலங்களில் எதேனும் ஒரு மகசூல் இல்லாது போனாலும் இன்னொரு மகசூல் விளையக்கூடும். எதொரு பயிரும் சாகுபடி செய்ய முடியாதபடி நிலங்கள் கெட்டுப்போகா. விபசாயத்திலும் பட்டினக் கரைகள் கட்டடப் போக்குகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டாலும்

கொஞ்சங் கொஞ்சமாகவே ஏற்படக் கூடும். தொழில் முறைகளிலோ திடீரென்றும் பெரும் மாறுதல்களும் ஏற்பட்டு விடலாம். ஆகையால், தொழில்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்கள் விபசாயத்திற்கும் வீடு கட்டுவதற்கும் கொடுக்கப்படும் கடன்களைக் காட்டிலும் விரைவாக வசூலாகவேண்டும்; அல்லது நாடெங்கும் ஒரே தாபனமாகப்பலவேறு தொகைகளைப் பலவேறு தொழில்களுக்குக் கடன் கொடுத்ததாக இருக்கவேண்டும். அதற்குப் புதிதாகத்தான் பாங்குகள் ஏற்படவேண்டும்.

நம் மாகாணத்தில் பலவேறு விதத் தொழில்களில்லை. ஆகையால், அப்படிப் பெரிய பாங்கு நம் மாகாணத்தில் அமைப்பதும் பிரயோசனமில்லை. சிறு தொழில்களுக்கும் மத்தியதரத் தொழில்களுக்குமே அரசாங்கச் சட்டத்தின்படி கிடைக்கும் உதவி போதியதாக இருக்கவில்லை. ஆகையால், அவற்றிற்காக வேணும் நம் மாகாணத்தில் ஒரு தொழிற் பாங்கை ஆரம்பிக்கலாம்.

(தொடரும்.)

---

11. செய்தித் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. 1933-ம் வருடம் முதல் 1936-ம் வருடம் முடிய நான்கு வருடங்களுக்கும் சென்னை மாகாணம் முழுமைக்கும் சேர்ந்து 220 இலட்சரூபாவுக்குமேல் நிலவரி வசா பெற்றோம். தஞ்சை சில்லாவுக்கு மட்டும் 40 இலட்ச ரூபாவுக்குமேல் வசா கிடைத்தது. 1937-ம் வருடமுதல் 1941 ஏப்பிரல் மாதம் முடியத் தஞ்சை சில்லா உள்பட மாகாணம்முழுவதற்கும் வருடம் 1-க்கு 75 இலட்ச ரூபா வீதம் 375 இலட்ச ரூபாவரையில் வசாபெற்றிருக்கிறோம். அதில் தஞ்சை சில்லா சம்பந்தப்பட்டவரையில் 1923-ம் வருடத்திய மறுசெட்டில் மெண்ட்படி கடைசியாக 1925ம் வருடத்தில் ரூ 1-க்கு 0-3-0 வீதம் உயர்த்தப்பட்ட தொகை குறைக்கப்பட்டுவிட்டது. இதனால் 1893ம் வருடத்திய செட்டில்மெண்ட் படிக்குள்ள பழைய தீர்வைக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்விதம் 0-3-0 வீதம் உயர்த்திய தீர்வை குறைக்கப்பட்டதில் தஞ்சாவூர் சில்லாவுக்கு வருடம் ஒன்றுக்கு ரூபா. 10,05,677 வீதம் 5 வருடத்திற்கும் மொத்தத் தொகை ரூ. 50,28,385 வசா கிடைத்திருக்கிறது;

கூட்டுறவு.

2. பருத்தி மேற்பார்வைச் சட்டம் (Cotton Control Act) கோயம்புத்தூர் மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி சில்லாக்களில் அமுலிலிருந்தது. திருநெல்வேலி சில்லாவில் புளிச்சிப் பருத்திச் சாகுபடியும் அதிகமாக இருந்ததால், அதற்கென ஒரு விபசாய அதிகாரியை நியமித்து அப்படிச் சாகுபடி செய்தவர்கள்மேல் பிரியாது தொடரப்பட்டது. 240 பிரியாதின் பேரில் ரூ 1213 அபராதம் விதிக்கப்பட்டது; வருடமுடிவில், 69 பிரியாதுகள் முடிவடையாமலிருந்தன.

Report on Agricultural operations.

3. பம்பாய் அரசாங்கத்திட்டத்தின்படி, கைத்தொழிலிலாக்காத் தலைவர் ஒரு தொழிலாளிக்குக் கைத்தொழிற் கருவிகள் வாங்குவதற்காக ரூ 500க்கு மேற்படாமல் 50 சதமானம் இனமாகவும் 50 சதமானம் வட்டியில்லாக் கடனாகவும் தரலாம். வேலை செய்வதற்கான முதலாகவும் ரூ. 250 வரை வட்டியில்லாக் கடனாகத் தரலாம். வாங்கிய கடனை 5 வருடத்திற்குள்ளாக மாதம் ஒரு தவணையாகக் கொடுத்துத் தீர்த்துவிடவேண்டும்.

Bombay Information.

ஆ. கிராமப் புனருத்தாரண ஸ்தாபனச் செய்திகள்.

1. வட ஆர்காடு சில்லாவில் சேர்ந்தரணை யாகவுள்ள 10 கிராமங்களில் அபிவிருத்திவாரம் கொண்டாடப்பட்டது. நிழல்தரும் மரங்கள் வைக்கப்பட்டன. குடிதண்ணீர்க்கரைப் பக்கமாகவுள்ள சிறு செடிகள் அப்புறப்படுத்தப்பட்டன. கிராமச் சங்கங்கள் நல்லவேலை செய்துவந்தன. 30 உரக்கிடங்குகள் கட்டப்பட்டன. விதையை அதிகப்படுத்தும் திட்டத்தையும் கையாளுவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. தென்னார்காடு சில்லா கந்தாது கிராமத்தில் தெருக்கள் வெகுவாகச் சுத்தி செய்யப்பட்டன. அகலமான சாக்கடைகள் வெட்டிவிடப்பட்டன. சில சங்கங்கள் 125 பாதை வேலைகள் எடுத்து அந்த வேலைகளைத் திருப்திகரமாகச் செய்துவந்தன.

Press Communique No. 33.

2. சென்ற மார்ச்சு மாதத்தோடு முடியும் காலாண்டில், திருநெல்வேலி சில்லாத் தாசில்தார்களும் டிவிசன் ஆபீசர்களும் கிராமங்களில் உரக்குழிகளும் கக்கூசுகளும் விளையாட்டிடங்களும் அமைக்க முயற்சிகள் எடுத்திருக்கின்றனர். அவற்றிற்காக ரூ. 16,589ம் செலவழித்திருக்கின்றனர். பிர்க்காதோறும் குடிகள் மகாநாடும் கூட்டப்பட்டன. செங்கற்பட்டு சில்லா மதுராந்தகம் தாலுகா பேரம்பாக்கம் கிராமத்தில் திருத்தமான உரக்கிடங்குகளுக்காக ரூ120க்கு நிலம் வாங்கப்பட்டிருக்கிறது.

Press Communique No. 33.

3. சேலம் சில்லாக் கழகத்தின் பிரசார வண்டி பல தாலுகாக்களுக்குச் சென்றன. சுகாதாரம் மதுவிலக்கு பொதுச்சுகம் பற்றிப்பிரசங்கங்களும் செய்யப்பட்டன. புகைப்படக்காட்சிகளும் காட்டப்பட்டன.

Prees Communique No. 33.

4. கால்நடை அபிவிருத்திக்காகச் சர்க்கார் மான்யம் கொடுப்பதோடு ஒரு நிதியும் (Live stock Improvement Fund) திரட்டுவதாக யோசித்துக்கொண்டிருக்கின்றனர். வாரந்தோறும் கூடுகிற சந்தைகளிலும், கால்நடைக்கண்காட்சிகளில் விற்பனைக்குக்கொண்டு வரப்படுகிற ஆடுமாடுகளுக்கும் அடுத்த வருடத்திலிருந்து ஒரு சிறு வரி விதித்து அதனைக் கால்நடை வளர்ச்சிக்காகவே உபயோகப்படுத்தலாமா என்பது அந்த யோசனை. அந்தப் புதிய யோசனையின் பலாபலன்களைச் சீர்தூக்கிப்பார்த்து, குடியானவர்களின் நன்மைக்கு உகந்த தீர்மானம் திருப்பூர் கால்நடைக் கண்காட்சி சபையில் நிறைவேற்றப்படலாம். (கண்காட்சி முடிந்துவிட்டது. தீர்மானம் எதுவும் நிறைவேறிய விபரம் தெரியவில்லை. ப-ர்)

கூட்டுறவு.

5. தார்வார் சில்லா தார்வார் தாலுகா மொகத் கிராமத்தில் கிராமாபிவிருத்தி வேலைகள் வெகுவாக நடந்திருக்கின்றன. அங்கே நெற்பயிரிடுபவர் சங்கம் ஒன்று 60 உறுப்பினர்களோடு வேலைசெய்து வருகிறது. 600 ஏக்கர்வரை விருத்தியான நெல் விதைக்கப்பட்டிருக்கிறது. கரும்பும் ஏராளமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. வெல்லம் பக்கத்தூர்ச் சந்தைகளில் விற்கப்படுகிறது. சிலர் எருமிச்சங் கன்றுகளும் ஒட்டுமாங்கன்றுகளும் நட்டிருக்கின்றனர். 1000 ஏக்கர்வரை குளத்துத் தண்ணீரால் சாகுபடியாகிறது. பாதைகளெல்லாம் ஒழுங்காகவும் நல்ல நிலைமையிலும் இருக்கின்றன. தெருக்களெல்லாம் ஒழுங்காகச் சுத்தம் செய்துவரப்படுகின்றன. குடிதண்ணீருக்காக இரண்டு பெரிய கிணறுகளும் ஒரு தெப்பமும் இருக்கின்றன. தெப்பத்தில் (guinea-worm) புழுக்கள் உண்டாகாதபடி இராசுபோரா (Rasbora) மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

வீடுகள்தோறும் கொல்லையில் சாக்கடைத் தொட்டிகளும் கக்கூசுகளும் இருக்கின்றன; ஆடுமாடுகளுக்கெனத் தனியாக நல்ல காற்றோட்டமுள்ள தொழுக்களும் இருக்கின்றன.

அந்தக் கிராமத்திலிருக்கும் சில்லா தலத் தாபனப் பள்ளியில் 85பையன்களும் 25 பெண் களும் படிக்கின்றனர். அங்கே ஒரு புத்தக வாசகசாலையும் முதியோருக்காக ஒரு இரவுப் பள்ளியும் நடந்து வருகின்றன.

Bombay Information.

6. பம்பாய் மேலக்கண்டே சுச்சில்லாவில் குசும்பாக் கிராமத்தில் ஊருக்குள்ளாக 80 அடி அகலமும் 1500 அடி நீளமுமாக 8 பாதைகள் போட்டிருப்பதோடு 1450 அடி நீளத்திற்கு ஒரு பாதையும் போடப்பட்டிருக்கிறது. 3000 ஒட்டுமாங்கன்றுகள் உள்பட 10000 மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. கிராமத்தைச் சுற்றி எல்லாப்பக்கங்களிலும் உரக்குழிகள்தோண்டப் பட்டுமிருக்கின்றன.

தூலியாத் தாலுகா அபிவிருத்திச் சங்கம் விதைகளும் உரங்களும் விபசாயக் கருவிகளும் விற்க அங்கே ஒரு கடை வைத்திருக்கிறது. பயிரிடுபவர்களில் 80 சதமானம் இரும்புக்கலப் பையை உபயோகித்து வருகின்றனர். கிராமப் பஞ்சாயத்து ஏழைக் குழந்தைகளுக்குப் பால் இனமாகக் கொடுத்து வருகிறது. கூட்டுறவுக் கடன் சங்கம் பொதுநல நிதியிலிருந்து இனமாக மருந்து கொடுத்துவருகிறது. ஒரு இரவு பாடசாலையும் மூன்று புத்தக சாலைகளும் நடந்துவருகின்றன. தூலியாத்தாலுகா புத்தகச் சுற்றுச் சாலைக்கும் அது ஒரு மத்தியதலமாக இருக்கிறது.

Bombay Information.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்.

1. இப்பொழுதிருக்கும் கூட்டுறவுச் சட்டம் 5 வது விதியின்கீழ் 5ஏ என்றொரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்படி, கூட்டுறவுச்சங்கங்களின் கணக்குகள் முதலியனவற்றை இன்ன தேதிவரை இன்னமாதிரி இன்னகாலத்திற்குள் எழுதி முடிக்கவேண்டுமென்று சங்கத்திற்குக்கூட்டுறவுப் பதிவாளர் உத்திரவிடலாம். அந்தச்சங்கம் அந்தப்படி எழுதி முடிக்கத்தவறினால், தன் கீழ்ச் சிப்பந்தியைக்கொண்டு எழுதி முடிக்கச்செய்து அதற்காகப் பிடித்திருக்கும் காலத்திற்குத் தக்கதாக ஒரு தொகையை அந்தச்சங்கம் அரசாங்கத்திற்குச் செலுத்தவும், செலுத்தாதுபோனால் அதனை வசூலிக்கவும் உத்தரவிடலாம்.

அதே மாதிரியாகக் குறிப்புக்கள் (Statements and returns) தயார் செய்யும்படி உத்தரவிடவும் தவறினால் கீழ்ச் சிப்பந்தியைக் கொண்டு தயாரிக்கவும் அதன் செலவை வசூலிக்கவும் செய்யலாமென்று 7-வது விதியின் கீழ் 5 வது உபவிதியொன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

G. O. No. 904. Lev. dd 14—5—41.

2. சென்னைக் கூட்டுறவுச் சங்கச்சட்டத்தின் 12ஏ விதியைத் திருத்தப்பட்டிருக்கிறது. அதன்படி வரையறுக்கப்பட்ட பொறுப்பும் பங்குகளுமுள்ளனவும் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பனவுமான பாங்குகளில் சேம நிதி முதலிய சேமத் தொகைகளெல்லாம் செலுத்தப்பட்டிருக்கும் பங்குத் தொகைக்குச் சரியாகும்வரை, வருடந்தோறும் முந்திய நிகர இலாபத்தில் மூன்றிலொருபங்கிற்குக் குறையாமல் சேமநிதிக்குக் கொண்டுபோகவேண்டும்; அதன் பிறகும் கால்வாசிக்குக் குறையாமல் கொண்டுபோகவேண்டும்.

Fort St. George Gazette

3. சேலம் சில்லாவில் கண்வாய்ப்புதூர் மேட்டுப்பட்டிக் குடியேற்ற நிலத்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. மேட்டுப்பட்டியில் வீடுகள் கட்டுவதற்காக 75 மனை நிலங்கள் சாரி செய்யப்பட்டிருக்கின்றன. சில்லா விபசாய அதிகாரியும் கால்நடை அதிகாரியும் பதிலிக் கூட்டுறவுப் பதிவாளரும் சில கிராமங்களில் விபசாய வேலைகளை அதிகப்படுத்துவதற்காக ஒரு கழகமாகவும் அமைந்திருக்கின்றனர்.

Press Communique No. 33.

4. தஞ்சாவூர் சில்லா கூத்தனூர் நிலங்களை ஒன்று சேர்க்கும் சங்கம் 8 துண்டு நிலங்களை 4 பெரிய நிலங்களாகச் சேர்த்திருக்கிறது. இது சம்பந்தப்பட்ட பரப்பு 8 ஏக்கர் $67\frac{1}{2}$ செண்டாகும். திரிசிராப்பள்ளி சில்லா நங்கவரம் சங்கம் மூன்றிடங்களில் நிலங்களை ஒன்று சேர்த்தது. இதுவரை 205 துண்டு நிலங்களை 94 பெரிய நிலங்களாகச் சேர்த்திருக்கிறது. இது சம்பந்தப்பட்ட பரப்பு 247 97 ஏக்கர் ஆகும். இதற்காகச் சென்ற காலாண்டில் 1,302 ரூபா செலவாகியிருக்கிறது.

Press Communique No. 33.

5. புரோச்சைச் சேர்ந்த அல்தார் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் 1939 அக்டோபரில் பதிவுசெய்யப்பட்டது. ரூ. 1200 பங்குத் தொகையாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. விற்பனைக்காக உறுப்பினர்கள் கொண்டுவந்த பருத்தியை மூன்று தரமாகப் பிரித்து 1,13,000 ரூபாவிற்கு விற்கப்பட்டது. அரிசி கோதுமை மண்ணெண்ணெய் தேயிலை சருக்கரை வாங்கி உறுப்பினர்களுக்கு 15,500 ரூபாவிற்கு விற்கப்பட்டது. சுற்றியுள்ள (எவ்வளவு தூரத்திற்குள் என்பது தெரியவில்லை. ப—ர்.) 25 கிராமங்களிலுள்ள உறுப்பினர்களும் மற்றவர்களும் அவை நன்றாக இருக்கிறதென்று வெகு ஆவலுடன் வாங்கிப் போனார்கள். சங்கம் ரூ. 600 இலாபத்தில் வேலை செய்திருக்கிறது. சட்டப்படி கொடுக்கக்கூடிய உச்ச அளவு இலாபம் $7\frac{1}{2}$ சதமானம், உறுப்பினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் ரூ. 40, தரும நிதிக்கும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

Bombay Information.

6. பம்பாய் மாகாணத்தில் இதுவரை ஆறு உயர்தரப் பள்ளிகள் விவசாயப்பள்ளிகளாகவும் வியாபாரப் பள்ளிகளாகவும் கைத்தொழிற் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இவ்வருடத்தில், பம்பாயிலுள்ள ஒரு உயர்தரப் பள்ளி கைத்தொழிற் பள்ளியாக மாற்றப்படும். இந்தத் தொழிற் பள்ளிகளெல்லாம், நாலாவது வகுப்பு முதல், பாடத்திட்டம் அவ்வவற்றிற்குத் தக்கதாக மாற்றி நடத்தப்படுகிறது. தொழிற்பள்ளி இறுதித் தேர்வுச் சீட்டுகளையும் (Certificate) மற்ற உயர்தரப் பள்ளி இறுதித் தேர்வுச் சீட்டுகளையும் சரியாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. சில சில வேலைகளுக்குத் தொழிற் கல்வியறிவு இருப்பது சிலாக்கியமென்றால், அந்தத் தொழிற் கல்விச் சீட்டுப் பெற்றிருப்பவர்களுக்கே முதலாவதாகவும் வேலை தருகிறது.

அரசாங்கம், சர்வகலாசாலையையும் இந்தத் தேர்வுச்சீட்டை மெட்ரிகுலேசனுக்குச்சரியானதென அங்கீகாரம் பண்ணும்படியாகச் செய்து அவர்கள் மேற்படிப்புக்கு எந்தெந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாமோ அதே கல்லூரிகளில் இவர்களும் படிக்கக்கூடியதாகவும்செய்துவிடும்.

Bombay Information.

ஈ. கூட்டச் செய்திகள்.

நெல்லை மெய்கண்ட சாத்திர மாநாட்டைச் சார்ந்த தமிழ்ப்புலவர் மாநாட்டில் 24-5-41வயன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில:

1. தமிழ் ஒலியல்லாத ஷ, ஸ, ஹ முதலிய பிற ஒலிகளையும் குறிகளையும் தமிழ் நெடுங்கணக்கிற் கையாண்டு வருவதும், அது நிலைப்பதுபற்றிச் செய்யும் கிளர்ச்சியும், தமிழ் இலக்கண வரம்பை முற்றிலுஞ் சீர்குலைத்துத் தமிழ் ஆக்கத்தைக் கெடுத்துவிடுமாதலால், அக்கிளர்ச்சியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

2. அரசாங்கத்தார் முன்னர் வெளியிட்டுள்ள கலைச்சொற்களை ஆட்சியிலிருந்து தள்ளி

விடவும் அவர்கள் அநுமதித்துள்ள சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ள "கலைச்சொற்கள்" என்ற நூலையே ஆட்சிக்குக் கொண்டுவரவும், இந்நூலின் சொற்கள் பெரும் பான்மை ஆட்சிக்கு வந்துவிட்டமையால், இப்போது அரசியலார் அமைத்துள்ள தமிழ்க் கலைச்சொற் கழகத்தை உடனே கலைத்துவிடவும் இக்கூட்டம் அரசியலாரை வேண்டிக் கொள்ளுகிறது.

3. தமிழ்ப் பாடப் புத்தகங்களும், கணக்கு, பூகோளம், வரலாறு முதலிய கலைப் பாடப் புத்தகங்களும், தமிழ் நடை பிறழ்ந்து பிழை மலிந்தனவாக இருத்தலினாலே, தக்க தமிழ்ப் புலவர்கள் நூற்றுக்கு ஐம்பது வீதமாவது தமிழ்ப் பாடப் புத்தகக்குழு (Text Book Committee) வில் இடம் பெறுமாறு நியமிக்கவும், அதிலுள்ள கணக்கு, பூகோளம் முதலிய உட்கழகங்களிலும் புலவர்கள் 25% இடம்பெறுமாறு செய்யவும், இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிறது.

4. தமிழ் மக்களின் பெயர்களும், தமிழ் மக்களின் இல்லம், வாணிபக்கழகங்கள் முதலிய எல்லாவற்றின் பெயர்களும் ஆங்கிலம் வடமொழி முதலிய பிறமொழிச்சொற்களிலன்றித் தமிழ் மக்கள் தனித்தமிழ் மொழிச்சொற்களாலேயே அமைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் அனைவரையும் இம்மாநாடு வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிறது.

5. உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் சிலர் தாய்மொழியைப் பயிலாமலேயே B. A., வரையிலும் படிப்பதற்கு Part II என்பதில் தமிழோ, சமஸ்கிருதமோ, இந்தியோ விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்வதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டுத் தமிழ்ச் சிறுவர்கள், தங்கள் தாய்மொழியை முதன்மையாகவும், கட்டாயமாகவும் கற்கவேண்டி, அவர்கட்கு (Part II) பகுதி II என்பது தமிழ் ஒன்றிற்கே அமைய வேண்டுமென்றும், சமஸ்கிருதம் முதலிய பிறமொழிகள் பகுதி III (Part III) விருப்பப் பாடமாக அமையவேண்டுமென்றும் விரும்பி, அதற்காவன செய்து உதவுமாறு, அரசாங்கத்தாரையும் சென்னை, அண்ணாமலை, திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தாரையும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

6. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை இப்பொழுது சிலர் கிளர்ச்சி செய்கின்ற வகைப்படி மாற்றவேண்டுவது அவசியமில்லை; இவ்வித மாறுதல் ஏற்படின், தமிழ் மிகுந்த இடையூறுகட்குட்படும்; உண்மைநலம் ஒழியும் என்று இம்மாநாடு எண்ணுகிறது.

செந்தமிழ்ச் செல்வி.

---

12. அறிவுரைத் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. ஏக்கர் என்ற சொல் யோக் (yoke) என்ற ஆங்கிலச் சொல்லிலிருந்து உண்டாயது. யோக் என்ற சொல்லிற்கு நுகம் என்றருத்தம். நுகத்தில் மாட்டிய இரண்டு காளைகள் விடியற் காலம்முதல் பொழுதடைகிறவரை உழமுடியும் நில அளவுக்கே 'ஏக்கர்' என்ற பெயர் முதலிலேற்பட்டது.

நல்வழி

2. சப்பானில், நெல் ஏக்கருக்கு 3417 இராத்தல் விளைகிறது; நம் நாட்டில், 1088 இராத்தல்தான் விளைகிறது; உலகச் சராசரி 1356 இராத்தல். அமெரிக்காவில் சோளம் ஏக்கருக்கு 1552 இராத்தல் விளைகிறது; நம் நாட்டில், 713 இராத்தல் விளைகிறது; உலகச் சராசரி 1312 இராத்தல். சீனாவில், நிலக்கடலை ஏக்கருக்கு 1668 இராத்தல் விளைகிறது; நம் நாட்டில், அதில் பாதிகூட இல்லை, 802 இராத்தல்தான். அமெரிக்காவில் சணல் ஏக்கருக்கு 232 இராத்தல் விளைகிறது; நம் நாட்டில் 89 இராத்தல்தான்; உலகச் சராசரி 178 இராத்தல். — முத்தையா முதலியார்.

(நம் நாட்டிலும் உலகச் சராசரி விளைவதென்றாலும், எவ்வளவோ அதிக விளைவை நாம் காணக்கூடும். மற்ற நாடுகளின் உச்ச அளவும், நம் நாட்டில், விளையச் செய்யலாம். ப-ர்.)

3. அரம்ப அறுவை மரப்பொடி (saw-dust) மற்றவற்றோடு கலக்காது (resistant) வக்கரித்துக்கொண்டிருக்கும் (refractory) ஆதலால், அதனை எளிதில் உரமாக்கிக்கொள்ள

முடியாது. ஆனால், அதற்கு உறிஞ்சுகிற சுபாவமுண்டாதலால், அதனை புல்லோடும் சருகோடும் மாடுகள் படுப்பதற்கும் விரிக்கலாம்; உரக்குழியில் சாணத்தோடு போட்டுவரலாம். அதில் பொத்தல்கள் அதிகமிருப்பதால் (Porous) இப்படியாகச் சேகரிக்கப்படும் உரம் கனத்திருப்பதுடன் ஒட்டவும் செய்கிற (Heavy and sticky) தரைக்கும் ஏற்றதாகும்.

Indian Farming.

4. சணல் தக்கைப்பூண்டு உரங்களை போட்ட நிலங்கள் பீகாரில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ 10 முதல் ரூ 15 வரை பெறுமான அதிக விளைவைக் கொடுத்திருக்கின்றன. ஐக்கிய மாகாணம் நாகினாவில் ஏழுமுதல் ஒன்பது வாரச் சணலை மடக்கியுழுததில் உரமேபோடாத நிலத்தைக் காட்டிலும் ஏக்கருக்கு ரூ 40 அதிக விளைவைத் தந்தது; ஐந்துவாரச் சணலை மடக்கியுழுததில் ஏக்கருக்கு ரூ 23 பெறுமான அதிக விளைவே கிடைத்தது.

வர்த்தக ஊழியன்.

5. பெர்கம்பூரில் 1933-35ம் வருடங்களில் மூன்று மகசூலுக்கு நெல்லுக்கு மிளகைப் பூண்டு croton (sparsiflorus)ம் சணலு sumhempcrotolaria juncea)ம் தனித்தனி ஏக்கருக்கு 4000 இராத்தல் போட்டும் அவற்றின் பலனை அவை மாதிரியே அமைந்துள்ள உரமேற்றாத நிலத்தின் விளைவோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் மிளகைப் பூண்டுரமிட்ட நிலத்தின் விளைவிற்கும் சணலுரமிட்ட நிலத்தின் விளைவிற்கும் அவ்வளவாக வித்தியாசம் ஏற்படவில்லை. இந்த உரமேற்றிய நிலங்கள் உரமேற்றாத நிலத்தைக் காட்டிலும் 12 சதமானம் அதிகமாகவும் விளைந்தன.

The Madras Agricultural journal.

6 நாம் சாமானிய சனங்களுக்கு உதவுவதெப்படி?

எந்த நாட்டு மக்களையும், விளைவிப்பவர் (producers) செலவழிப்பார் (consumers) என இருவகையினராகப் பிரிக்கலாம். சாதாரணமாகப் பட்டினங்களிலிருப்பவர்கள் செலவழிப்பவர் அல்லது தின்று அழிப்பவர்களாகவும், கிராமங்களிலிருப்பவர்கள் விளைவிப்பவர்கள் அல்லது செய்பவர்களாகவுமிருக்கின்றனர். செலவழிப்பவர்களாகிய நாம் விளைவிப்பவர்களுக்கு எவ்வாறு உதவக்கூடுமென்பதைக் கவனிப்போம். நாம் நம்முடைய தேவைகளைப் புத்திசாலித்தனமாகப் பெறுவதினாலேயே அவர்களுக்குதவி வரவுங்கூடும்.

நாம் ஒரு பொருளை வாங்குகிறோமென்றால் அந்தப் பொருளுக்கு ஒரு தேவையேற்படும்; அந்தத்தேவையைப் பூர்த்திசெய்வதற்குச் சிலர் முயற்சிக்கவேண்டியதும் வரும். அம்மட்டில் அவர்களுடைய வாழ்விற்கும் அம்முயற்சி பயன்படும். ஆகையால், நாம் எப்பொழுதும் விலைகொஞ்சம் அதிகமாக இருந்தாலுங்கூட, உள்நாட்டு விளைபொருள் செய்பொருள்களையே வாங்கவேண்டும்.

ஆட்களை ஆலைகளில் திரட்டிச்செய்யும் பொருள்களும் நாட்டிற்கு அவ்வளவாக நல்ல பயனையளிக்காது. பல பெயர்கூடி ஒவ்வொருவரும் ஒரு பாகமாக ஒரு பொருளைச் செய்வதென்றாலும் அவ்வளவாக விருத்தியிருக்காது. தொழில்களெல்லாம், கூடியவரை, சிறு தொழில்களாகக் குடிசைத் தொழில்களாகக் கிராமத் தொழில்களாக நடத்திவரவேண்டும். நம்முடைய தேவை அதிகமாக ஆக ஆக விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வேலையும் பெருகும். அவ்வளவிற்கு நாம் சாமானிய சனங்களுக்கு உதவுகிறவர்களுமாவோம். (குன்னூரில் செய்த பிரசங்கசாரம் மெயில்.)

J. C. Kumarappa.

ஆ. கிராமப் புனருத்தாரண தேசமுன்னேற்றக் குறிப்புக்கள்

1. கிராமப் பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் வேலைசெய்ய, பயிற்சி பெற்ற கிராமத் தொண்டர்கள் (Rural Guides) வேண்டும்; அவர்களுக்கு நல்ல சம்பளமும் கொடுக்கப்படவேண்டும்; அவர்கள் வேலையும் கண்காணிக்கப்படவேண்டும்.

சிறந்த விபசாய முறைகளைக் கையாடவும் தேவைகளைச் சௌகரியமாய் வாங்கவும் விளை

பொருள்களை இலாபகரமாய் விற்கவும் செம்மையாய்வாழவும் உதவத்தக்கதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். அவை கூட்டுறவின் தத்துவங்களையும் நடைமுறையையும் கிராமவாசிகளுக்குப் போதிக்கவும் வேண்டும்; சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பள்ளிகள் வாசகசாலைகள் முதலியன மூலமாக எழுத்தறிவையும் சுகாதாரப் பொருளாதார அறிவையும் (விருத்தியான விபசாய முறைகளையும். ப—ர்.) பரப்ப வேண்டும்.

(இந்து) சர். தி. விசயராகவாச்சாரியார்.

சாரோடார் விபசாயிகளின் வெற்றிக்கனுகுணமான சில நல்ல பழக்கவழக்கங்களை நாமெல்லாரும் கையாளவேண்டும். (1) மூடக்கொள்கைகளுக்கு இடங்கொடாமல், பசு எருமை இவற்றில் எது இலாபகரமோ அந்த மாட்டைத்தான் அவர்கள் வைத்துக்கொள்ளுகிறார்கள். (2) காளங் கன்றுகளை வளர்க்க வேண்டுமென்று வைத்துக்கொள்ளாமல், இளங்கன்றுகளாகவே விற்றுவிடுகிறார்கள். (3) காளங் கன்றுகளை வளர்ப்பதைவிடத் தேவையான போது மாடாக வாங்குவது இலாபகரமென்று அப்படிச் செய்கிறார்கள். (4) கால்நடைகளுக்குப் பருவமாதங்கள் மூன்றிலும் கொட்டகையிலேயே தீனிபோட்டு உரம் சேதமாகாமல் சேகரித்துக் கொள்ளுகிறார்கள். (5) கால் நடைகளை நிரம்ப வயதாவதற்கு முன்னமேயே விற்றுவிடுகிறார்கள். இவைதான் தொழில் முறையில் கால் நடைகள் வளர்ப்பது இலாபகரமாயிருக்கும்படி செய்யக்கூடியது. (மேய்ச்சல் சௌகரிய மிருந்தால், காளங்கன்றை வளர்ப்பதுமே நல்ல இலாபம் தரும். ப—ர்.)

Indian Farming.

3. மனிதன் செல்வம் திரட்டும் இயந்திரமாக மட்டு மிருக்கவில்லை; அவன் உயிரோடும் வாழ்பவன்; அவனுடைய உடல் நலம் மனோநலம் யோக்கியதை இவை ஒவ்வொன்றையும் வளர்ப்பதனைத்துமே, அவனுடைய பொருளாதார விருத்திக்கும் உதவுவனவாகும். ஆகையால், கிராமத் தொண்டன் மனிதனை மனிதனுக்கும் காரியங்களை யெல்லாம் விட்டு, அவனுடைய பொருளாதார விருத்தியை மட்டும் கவனிப்பதில் பிரயோசன மில்லை. இன்றைக்கு, கிராமவாசி கேவலமான நிலமையிலிருக்கிறான்; அவன் உடம்பில் பலமில்லை; அவன் எளிதில் வியாதிக்கு ஆளாகிறான். உடம்பில் திடமும் ஊக்கமும் இல்லாத மனிதன், ஆசையில்லாத மனிதன் எப்படி விளைவை நிரம்பக் காணமுடியும்? நடைப்பிணமாக வாழ்ந்து வருகின்றவனுடைய விருத்திக்காக வேலைகள் செய்வதில், அவனுடைய தொழிற்களத்தையும் கருவிகளையும் திருத்துவதிலும் அவனைச் செம்மையாக்குவதே அதிக முக்கியமாகும். அப்படிச் சொல்லுவதிலிருந்து அவனைத் திருத்தித்தான் மற்றவற்றிற்கு வரவேண்டுமென்று நினைத்துவிடக் கூடாது. அவன் சம்பந்தப்பட்ட காரியங்களெல்லாவற்றையுமே ஒன்றாகவும் உடனேயும் கவனிக்கவேண்டும். அவனுடைய சுற்றுப்புறமும் குடிதண்ணீர் ஆதாரமும் சுத்தமாக இருந்துவர வேண்டும். அவனுடைய உணவும் அவன் சம்பாத்தியத்திற் குள்ளடங்குவதாகத் திருத்தப்படவேண்டும். அவனை நிறைந்த விளைவைக் காணக்கூடியவனாகவும் புத்திசாலியான குடியானவனாகவும் ஆக்கக்கூடிய கல்வி அவனுக்கு கொடுக்கப்படவேண்டும். சமய சம்பந்தமான கல்வியும் யோக்கியாபி விருத்திக்கான போதனையும் அவனுக்குக்கொடுக்கப்படவேண்டும். அவன் சூதாட்டம் குடி முதலிய கெட்ட பழக்கங்களுக்குப் பதிலாகச் சுகத்தை சந்தோசத்தைப் பெருக்கும் விளையாட்டுகளிலும் பொழுது போக்கிலும் பழகவேண்டும். இவையனைத்தும் அவனுடைய பொருளாதார விருத்திக்கும் உதவும். இவற்றிலெதும் செய்யாமல் வெறும் பொருளாதார விருத்தித் திட்டத்தால் அதிகப் பலன் இருக்கக் கூடியதில்லை.

பொருளாதார விருத்தியைக் கவனிக்கப் போகும்பொழுது, அரசாங்கத்தின் உதவி

யின்றித் தன்னாலேனும் மற்றும் பலர் கூடியேனும் அதிகம் செய்துகொள்ள முடியாது. தங்கள் முயற்சியெல்லாம் மேல்நோக்கிச் செல்ல முடியாது தடைபடுவதையும் கிராமத் தொண்டன் உணர்வான். அப்பொழுது, அவன் அரசாங்கத்தையே அவற்றி லீடுபடும்படியாகப் பொதுசன அபிப்பிராயத்தைத் தூண்டிவிடுவதொன்றையே செய்ய முடியும்.

(Social Welfare.) Bhrathan Kumarappa.

இ. இலக்கிய இலக்கண அருங்கலை போதனை முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. தாய்மொழியை மறந்தவர்கள் தம்மையே மறந்தவராவார்கள். நாட்டுப்பற்றிற்குத் தாய்மொழியே அடிப்படை. அவ்வந்நாட்டு மக்கள் தத்தம் தனித்தகைமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவரவர் தாய்மொழியே போதிய வேலியாகும். அதுவே யாருக்கும் மெய்ப்பாட்டுணர்ச்சியை விரைவில் விளைவிக்கும். ஒருவன் தான் கருவிற்றிருவாய்ப் பயின்ற தன் சொந்த மொழியில் நிரம்பிய திறமை பெற்றாலன்றி, பிறமொழிகளின் அருமை பெருமைகளை அறியவும், இலக்கிய நயம் உணர்ந்து மகிழவும், அவற்றிலுள்ள சிறந்த பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் இயலாது. பிறமொழிகளில் திறமைபெறுதற்குத் தாய்மொழிதான் ஒரு சிறந்த கருவியாம். ஆதலின் ஆரம்ப வகுப்புகளில் தாய்மொழிப் போதனை திருந்திய முறைகளில் அமைதல் வேண்டும்......சிறுவர் தமது சொந்த மொழியில் திருத்தமாகப் பேசவும், எழுதவும் திறமை பெறுவார்களானால், அவ்வுதவியைக்கொண்டு பிறமொழிகளை எளிதில் கற்பார்கள். தற்கால உலக வாழ்க்கைக்குப் பிறமொழிகளின் அறிவு எவ்வளவுக்கெவ்வளவு இன்றியமையாததாக விருக்கின்றதோ அவ்வளவிலும் பதின்மடங்கு தாய்மொழியின் அறிவு வேண்டுவதாகும்...... சிறுவர்கள் பிறமொழிகளின் சிறப்பியல் நயங்களைக் குறைந்த கால வளவில் எளிதாக உணர்தற்குத் தாய்மொழி உதவி யின்றியமையாததாகும்.........ஆதலின் தாய்மொழி வகுப்பில்தான் பிறமொழித் தேர்ச்சிக்குரிய அடிப்படைகள் கோலப் பெறுதல்வேண்டும். தாய்மொழி இலக்கணத்தைக் கொண்டே பிறமொழி இலக்கண பேதங்களைச் சிறுவர் உணருமாறு செய்தல் ஆசிரியர் கடமையாகும்.

"பிரம்பேணில் பாரந்தாங்கும்" என்றபடி தாய்ப்பால் உண்டு உரம் பெற்றவர்கள் உடல் உறுதிபெற்றுப் பெரும் பாரங்களைத் தாங்கச் சலிக்காது நிற்பதுபோலத் தாய்மொழிகளில் வல்லவர்கள் பிறமொழிகள் எவ்வளவு சிக்கலாக இருப்பினும் அவற்றை எளிதில் கையாளுவார்கள். உதாரணமாக, நம்நாட்டில் வங்காளிகள் அங்கிலத்தில் பெரும்புலமை பெற்றவர்கள் எனப் பேர் பெறுவதற்கு அவர்களது தாய்மொழித் திறமையே முதற்காரணமாம் என்றுணர்க.

இளமையே உச்சரிப்புக்களைத் திருத்தமுற அறிதற்குரிய பருவமாம். ஆதலின் சிறு பருவத்திலேயே பிள்ளைகட்குத் தாய்மொழி உச்சரிப்பு நன்கு பயிற்றப்படல் வேண்டும். தாய்மொழிகள் தத்தம் உள்நாட்டில்தான் சிறப்புடையன. இப்பேருலகின் எப்பகுதியினும் பழகுவதற்கும் மக்கள் கைத்தொழில் வாணிபம் முதலிய பிறதொழில்களில் அவ்வத்தேயத்தாருடன் உறவாடிப்போதிய அறிவைப் பெறுவதற்கும் உலகப் பொதுமொழி யொன்று இன்றியமையாததாகின்றது. தற்போது அங்கிலமே அம்மொழியாகவும் விளங்குகின்றது. ஆகவே, இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு தேயத்தாரும், தாய்மொழி அங்கிலம் என்னும் இருமொழியும் கற்கும் கடமையுள்ளவர்களாகின்றனர் என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் அங்கிலத்தில் தகுந்த புலமை பெறவேண்டுமெனில், அவரவர் தாய்மொழியில் முன்னர்புலமை பெறுதல் வெகு முக்கியமாம். மக்கள் இதனை யறியாது அங்கிலம் ஒன்றனையே குறிக்கோளாகக்கொண்டு தாய்மொழியைப் புறக்கணிக்கின்றனர். தாய்மொழி யறிவே, பிறமொழிகளை யுணர்தற்குரிய தாய் அறிவென்பதை அவர்கள் மறக்கலாகாது. தாய்மொழிப்புலமை நிரம்புதல், அடிமரத்திற்கு நீரூற்றுவது போலாம். அவ்வாறன்றிப் பிறமொழிகளையே முயன்று கற்று இரண்டிலும் அறிவு நிரம்பப் பெறுமை

ஒருவன் கையிலுள்ள அரிய பொருளை வீசி யெறிந்துவிட்டுத் தனக்குப் பொருள்வேண்டிய பொழுது வேறு பொருள்களை அரிப்பரித்துத் தேடுதலோ டொக்கும். ஆதலின், ஒவ்வொரு வரும் தத்தம் தாய்மொழியில் சிறந்த தனித் திறமையும் அதன் உதவிகொண்டு பிறமொழி களை வேண்டியவரையில் மென்மேலும் பயன் படுத்திக்கொள்ளுதற்குரிய பொதுத்திறமை யும் பெறுதல் நலமாம். இச்சீரிய கருத்தினை உட்கொண்டே உயர்தரக் கலைக் கழகங்களில் அங்கிலந்தவிர மொழிப்பாட மல்லாத பிறபா டங்களையும் தாய்மொழியிலேயே கற்பித்தல் வேண்டுமென அரசாங்கத்தார் உத்தரவிட் டிருக்கின்றனர். அவ்வாறு செய்வதால் தாய் மொழிப்பயிற்சிக்கு மிகுந்த நேரம் கிடைக் கிறது. மாணவர்களும் தங்கள் பாடங்களைக் குறைந்த காலத்தில் எளிதாக உணர்கின்றனர். அவர்கள் தம் தாய் மொழியில் உணரும் பொ ருள்களை எப்பொழுதும் தம் சொந்த வாக்கி யங்களில் சுலபமாகச் சொல்லவும் எழுதவும் வல்லவராகின்றனர். அவ்வாறன்றி அயல் மொழியில் கற்பிக்கப்பெறின் குருட்டுப் பாடம் செய்வதும், சொற்றொடர்களை மறந்து தடு மாற்றங்கொள்ளுவதுமாகிய பல இடையூறு களை அடைகின்றனர். இத்திருத்தத்தினை நடை முறையில் கொண்டு வருவதற்குத் தாய்மொழி நவீன முறைகளில் கற்பிக்கப்படல் வேண்டும். பரம்பரைப் போதனுமுறை இனித் தாய்மொழி யைக் கற்பிப்பதற்குப் பயன்படாது. தாய் மொழிப் போதகாசிரியர்கள் நவீன முறைக் கேற்ற தக்க பயிற்சி பெற்றவர்கள் ஆதல்வேண் டும். தாய்மொழி சீரிய நிலையைப் பெறவேண்டு மெனின், அம்மொழி ஆசிரியர்களேயன்றி ஏனைய பாட ஆசிரியர்களும் தமது தாய்மொழி யில் வல்லவர்களாகவும் திருத்தமுறப் பேசவும் எழுதவும் ஆற்றல் நிறைந்தவர்களாகவும் இருத் தல்வேண்டும். பிறபாடங்களுக்குரிய மரபுச் சொற்களையும், சொற்றொடர்களையும் அவ்வத் தாய்மொழிகளில் கண்டுபிடிக்கவும் புதிதாக அமைக்கவும் அறிஞர்கள் முற்படின் தாய் மொழி யுணர்ச்சி யெங்கும் ததும்பிநிற்கும். அன்றியும், ஆசிரியர்களும் மாணவர்களும் எந்த நேரத்திலும் தம் தாய்மொழியிலேயே திருத்தமுறப் பேசும் வழக்கைக் குறிக்கோளா கக் கொள்ளுதலும் வேண்டும்.

தாய்மொழி இத்தகைய சீர்திருத்தங்களைப் பெற்றுச் சிறப்புற விளங்குவதற்கு அவ்வம் மொழி ஆசிரியர் தத்தம் அதிகாரிகள் உள்ளத் தில் இங்நல்லுணர்ச்சிகள் தோன்றுவதற்குரிய வழியில் முயன்றுழைத்துத் தங்கள் நிலைமை யையும் தாய் மொழியையும் மேன்மைப்படுத் திக்கொள்வார்களாக!

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!

(தமிழணங்கு) சாவளப்பா.

2. கிராமங்களிலே இலட்சக்கணக்கின ரான நந்தமிழ் மக்கள், தமிழ் நூல்களைப்பற்றி ஏதேனும் அறிவார்களா? அவர்களெல்லாம் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளாத வரையில், தமிழ்ப்பற்றில்லாப்போலிமக்கட்கு நல்லகாலம். அவர்களெல்லாம் என்று எழுதப்படிக்கக் கற் றுக்கொள்வார்களோ, அன்றைக்குத் தமிழ் மேகம் குமுறும் மின்னும் பொழியும். அன்று தான் இலக்கிய வுலகத்தில் ஒரு புரட்சி ஏற்ப டும். அன்றுதான் கிராமம் நகரமென்னும் இரு தொகுதியும் ஒன்ருகும்.

கலித்தொகைச் சொற்பொழிவுகள்)

(வித்வான் நடேச சர்மா

3. ஐக்கிய மாகாணத்தில் வார்தாத் திட் டம் அமுலிலிருந்து வருகிறது; பள்ளிப் பிள்ளை கள் செய்பொருள்களின் விற்பனையிலிருந்து பள்ளிக்கூடத்தை நடத்தி வருவதென்ற எண் ணம் ஆரம்பத்திலிருந்தேயில்லை; ஆனல், கைத் தொழில்களுக்கு வேண்டியவற்றைக் கூடியவ ரை பள்ளிக்கூடங்களிலேயே செய்துகொள்ளு வதென்று செய்துவரப்படுகிறது. அருங்கலைப் பயிற்சிக்கும் தொழிலுக்கும் (arts and crafts) வேண்டிய காகிதங்கள் பள்ளிக்கூடங்களிலேயே குறைந்த செலவில் செய்துகொள்ளப்படுகின் றன. அதே மாதிரியாக, நூற்கவும் நெய்யவும் வேண்டியனவும் பள்ளிக்கூடங்களிலேயே தயா ரித்துக்கொள்ளப்படுகின்றன. மூங்கில்துளிரை யடித்துத் தட்டையாக்கித் தூரிகள் (Brushes) செய்யப்படுகின்றன. சட்டிபானை வனையவும் கற்பிக்கப்படுகிறது. தோட்டவேலை, இயற்கைப் பாடம், தேனீ வளர்த்தல், அட்டைகளை வெட் டியும் ஒட்டியும் வேண்டியன செய்தல், புத்தகங் கட்டுதல் முதலியன பலவகைத் தொழிற் பயிற் சிகளும் கொடுக்கப்படுகின்றன. இப்படிப் பயிற் சிகள் அரசியல் கட்சிக் கருத்துக்களையொட்டித் தரப்படுவனவாக இல்லாமல், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப் பதும் இங்கிலாந்தின்ஆரம்பக்கல்வியில் பெரும்

நன்மைகளை விளைவித்திருப்பதுமான மாறுதல்களையே, நம்மிந்தியாவின் தேவைக்கேற்ப மாற்றியனுட்டிக்கப்பட்டதாயிருக்கின்றன.

அட்டைவேலை, செதுக்குச் சித்திரவேலை, களிமண்வேலை, நெசவு, சவர்க்காரஞ் செய்தல், புத்தகங்கட்டுதல், மெருகுவேலை, வாசனைத் தைலங்கள் சேர்த்தல் முதலியன அநேக பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுகின்றன; அவை பெரிதும் பயன்படவுஞ்செய்கின்றன. பள்ளிக் கூடங்களில், உலர்ந்த பழங்களுடன் முளை கிளம்பிய காணப்பயறும் மதிய உணவாகக் கொடுத்துவரப்படுகிறது. நித்தம் அவற்றையே கொடுத்துவந்தால், முகத்திலடித்தாற் போலாகி விடுமென்று ஊடேயூடே பாலும் வெண்ணெய் யெடுத்த பாற்பொடியும் (Skimmed Milk Powder) கொடுத்துவரப்படுகின்றன.

பாடப் புத்தகங்களும் எழுதிப் படித்தற் கவசியமானவைகளும் கட்டாயப் படிப்பேற் படுத்தாத 49 நகராண்மைக் கழகங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் புதிதாக ரூ. 1225 செலவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகையில் மொத்தம் ரூ. 8775 செலவில் 40,000 பிள்ளைகளுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது; இதுதவிர்த்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் 100 பிள்ளைகளுக்கு மேலாக ரூ 6000 செலவில் படிப்பிற்கான பணவுதவியும் செய்யப்பட்டிருக்கிறது.

U. P. Public Instruction Report 1938—39. | C. Powell—Price

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I. அ. நம்மில் ஒவ்வொருவரிடத்தும் அறிவும் ஆற்றலும் நிரம்பிக்கிடக்கின்றன. அவை, வேலையின்மையால் துருப்பிடித்துத் தூங்குகின்றன. நாம் அவற்றை விழித்தெழச் செய்து, இக்காலத்திற்குப் பொருந்தாத குருட்டெண்ணங்களை உதறித்தள்ளி, நெஞ்சு உரமும் நேர்மைத்திறமும் பண்படு குணமும் பலர்புகழ் மாட்சியும் அமைந்த அறிவும் ஆன்ற செயலும் பொருந்திய நன்மக்களைப் பெற்றுத்தந்து, பிறந்த குடியும் புகுந்த குடியும் நற்பேரும் புகழும் பெறச்செய்து,

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு'

என்ற தமிழ் வேதத்திற்கு இலக்கியமாய்ச் சிறந்து விளங்கி, நாம் பிறந்த சமுகத்திற்கும் நாட்டுக்கும் தொண்டர்களாய் நின்று கடமையாற்றி, பேரும் புகழும் பெற்றுய்ய இறைவன் தண்ணருள் துணை நிற்பதாக.

(செங்குந்தமகளிர் மகாநாடு)

பரமதுடி பெரிய பாப்பம்மாள்.

ஆ. ஒவ்வொரு பெண்ணும் தனது கணவருடைய வருமானத்திற்குத் தகுந்தவாறு குடும்பத்தைச் சிக்கனமாக நடத்திவருதல் வேண்டும். "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்ற மூதுரையைப் பொய்ப்பிக்கும் படி நாம் நடந்துகொள்ளவேண்டும். அநாவசியமான செலவுகளையும் ஆடம்பரமான செலவுகளையும் வீண் சடங்குகளையும் குறைத்துக்கொள்ளவேண்டும். (ஒழித்திடவேண்டும். ப-ர்.) நம் குழந்தைகளே வரும் காலத்து மக்கள். ஆகையால், அவர்கள் நல்ல வழியில் நடந்துகொள்வதற்கு நாம் அவர்களைப் பல வகையிலும் பயிற்றுவிக்கவேண்டும். அநாவசியமாகக் குழந்தைகளைப் பயமுறுத்திப் பிற்காலத்தில் அவர்கள் பயங்கோளிகளாக இருக்கச் செய்யக்கூடாது. குழந்தைகள் துட்டத்தனமாக இருந்தாலும் அவர்களை நயமாகச் சாந்தப்படுத்தி நல்ல வழியில் பயிற்றுவித்தல் வேண்டும்.

(செங்குந்த மகளிர் மகாநாடு)

திருச்சி சுசீலா அம்மையார்.

II. ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி — மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே.

சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக் குதே — மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி யாடுதே.

நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே — கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே.

போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச் — சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே.

முக்கூடற்பள்ளு.

III. 1. குலைக்கிற நாய் கடிக்காது; இடிக்கிறமானம் பெய்யாது.
2. அசுவனி கார்த்திகையில் இடிஇடித்தால் ஆறு கார்த்திகை மழையில்லை.
3. ஆணி ஆறுந்தேதி குடகினுல், அறுபது நாளைக்கு மழை இல்லை.
4. ஆடி ஞாயிறு ஐந்தானுல், அரிசி விற்றவிலை நெல் விற்கும்.
5. ஆடி ஞாயிறு அஞ்சுபட்டால்: நாடுபடும்பாடு நாயும் படாது.
6. சட்டியிலிருக்கிறதுதான் அகப்பையில் வரும்.
7. சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாவதென்ன?
8. கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
9. கெட்டாலும் செட்டி செட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே.
10. குயவனுக்குப் பலநாள் வேலை, தடிகாரனுக்கு ஒரு நாழிகை வேலை.

IV. 1. *கடையாயார் பொருளையே விரும்புவர் இடையாயார் பொருளையும் மானத்தையும் விரும்புவர். தலையாயார் மானத்தையே விரும்புவர். மானமே பெரியோர்க்குப் பொருளாகும்.*

2. *ஒருவன் தீவினையை நெஞ்சத்தில் நினைத்தலும், செயலிற் காட்ட விரும்புதலுமாகா; அங்ஙனம் நினைப்பினும் விரும்பினும் அதன் பயனை அவன் எய்துவான்.*

3. *நஞ்சு கலந்த அன்னத்தைக்கண்ட அளவிலேயே அன்னப்பறவை தடுமாறி விழும்; வண்டுகள் குழறிஒலிக்கும்; மயில்கள் நிலை பிறழ்ந்து துள்ளி ஆடும்; கோழிகள் விரைந்து கத்தும்; அன்றிற்புள் மயக்கமெய்தும்; குரங்கு மலங்கழிக்கும்; காடைப் பறவை மயிர் சிலிர்க்கும்; நாகணவாய்ப்புள் எதிரெடுக்கும்.*

பண்டிதமணி மொழிபெயர்ப்பு. *சுக்கிர நீதி.*

ஓர் விடுகதை

உழவு தொழில் பெருமை யெல்லாம் உரைத்து நிற்பான்!
உழவர்களின் உழவனென உழைத்தும் நிற்பான்!
பழகு முறை வைத்தியமும் படிப்பும் சொல்வான்!
பார்முழுதும் "பொது நலமே" பரப்புவானே!

இவன் யார்? *கிராம தூதன்!*